உ

தமிழ்த்தாய் வாழ்க.

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத்

திங்கள் வெளியீடு

## தாது ஆண்டு

## (1936–37)

பன்னிரெண்டாந் துணர்

தஞ்சைக் கூட்டுறவுப்பதிப்பகத்தில்

அச்சிடப்பெற்றது.

# கட்டுரை எழுதிய பேரறிஞர்களும், கட்டுரைகளும்.


திரு. வித்துவான், ஔவை. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள்
வாழ் நாள் 1, 61
பரணர் என்னும் ஆராய்ச்சி நூல் 121, 161
கருவிலே வாய்த்த திரு 249, 265
நன்னனும் பரணரும் 419, 429
,, ப. கலியாணசுந்தரம் பிள்ளையவர்கள் B.A., Hons.,
தமிழ்ப்பத்திரிகையின் வரலாறு 9, 66
,, த. இராமநாத பிள்ளையவர்கள்
கருதலளவைப்பகுதி 17, 54, 81, 129
,, வை. சுந்தரேச வாண்டையாரவர்கள்
பிரம்பில் என்னும் வைப்புத்தலம் 22
எமநல்லூர் என்னும் வைப்புத்தலம் 145
,, T. S. நடராசன் அவர்கள்
இந்தியாவும் சீனவும் 27, 74, 89
,, K. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் B.A., B.L.,
வல்வடுகு நான்கு 34, 49
திருக்குறளுதவிய நெறிமுறை 171, 201, 229
,, பொழிற்றொண்டர்
தமிழ்ச்செய்திகள் 41, 223, 479
நன்கொடை 48, 80, 120, 160, 192,
[227, 228, 264, 303, 345, 427, 481
ஒரு துயரம் 159
புத்தக மதிப்புரை 119, 190, 479
மதிப்புரை 302, 343, 385, 427
,, L. உலகநாத பிள்ளையவர்கள்
நெல்லை வருக்கக்கோவை 1—20
சித்தரந்தாதி 1—14
பழைய பாடற்றிரட்டு 324, 387
தில்லையுலா 447

திரு. வித்துவான். ஐ. நடேச பிள்ளையவர்கள்
பாணர் மறுப்பின் ஆராய்ச்சி 93
,, வித்துவான். மா. இராசமாணிக்கம்
பண்டைத் தமிழர் மணமுறை 99
,, T. V. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள்
பாண்டியர் வரலாறு 106
செருத்துணையாரும் புகழ்த்துணையாரும்
அவதரித்த திருப்பதிகள் 155, 167
,, சில செய்திகள் 294
,, வித்துவான். வீ. குமாரசாமி ஐயரவர்கள்
திருவாதவூரர் திருவாய்மொழி 114, 137
,, K. கோவிந்தன் அவர்கள்
பெருங்காற்றும் மின்னலும் இடியும் 141
,, செல்வி. R. மங்கையர்க்கரசி
பெண்ணின் பெருமை 147
,, வித்துவான் முத்து. சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள்
நெடுந்தொகைக் குறும்பொருள் 182, 278, 305, 364
,, E R. நரசிம்ம ஐயங்கார் அவர்கள் B.A., B.L.,
திருவிளையாடற் புராணவாராய்ச்சி 193, 236
கல்லாட நூலாராய்ச்சி 316, 347, 395, 441
,, C. M. இராமச்சந்திர செட்டியாரவர்கள் B.A., B.L.,
மகாபலிபுரத்தின் பண்டையப்பெயர் 209
,, கோமான். ம. வி. இராகவன் அவர்கள்
காலவாராய்ச்சி 214, 257, 270
,, A. சீனிவாசாச்சாரியார் அவர்கள் B.A., L.T.,
இசைபுநூல் 243
,, அ. சிதம்பரம் செட்டியார் அவர்கள் B.A.,
எண்ணெயும் தண்ணீரும் 287
ஷை பிழையின் திருத்தம் 344
,, சிவ. குப்புசாமி பிள்ளையவர்கள்
வள்ளல் அதியமான் நெடுமானஞ்சி 333, 382

,, வித்துவான். ச. தண்டபாணி தேசிகரவர்கள்
நற்றிணை 355

,, வித்துவான். வீ. குமாரசாமி ஐயரவர்கள்
தமிழ்க் கவிச்சுவை 360

,, வே. மு. சீனிவாச முதலியாரவர்கள்
அகவல்பாவின் ஆய்வு 373, 403

,, அ. சுந்தசாமி பிள்ளையவர்கள்
ஒரு போலியுரை மறுப்பு 413

,, கு. நா. சுந்தரேசன் அவர்கள் B.A., Hons.,
கடிமர யானை 453

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு.

துணர் ௰உ. { தாது, சித்திரை. } மலர் க.


| | | |
|---|---|---|
| க. | வாழ் நாள்<br>வித்துவான். ஔவை. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள் | 1 |
| உ. | தமிழ்ப் பத்திரிகையின் வரலாறு<br>திரு. ப. கலியாணசுந்தரம் பிள்ளை அவர்கள் B.A., Hons. | 9 |
| ௩. | கருதலளவைப்பகுதி<br>திரு. த. இராமநாத பிள்ளை அவர்கள் | 17 |
| ௪. | பிரம்பில் என்னும் வைப்புத்தலம்<br>திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் | 22 |
| ரு. | இந்தியாவும் சீனவும்<br>திரு. T. S. நடராசன் அவர்கள் | 27 |
| சா. | வல்வடுகு நான்கு<br>திரு. K. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் B.A., B.L., | 34 |
| எ. | தமிழ்ச் செய்திகள் | 41 |
| அ. | நன்கோடை<br>பொழிற்றொண்டர். | 48 |
| கூ. | நெல்லை வருக்கக் கோவை | 1—8 |


செந்தமிழ்ப்புரவலர்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை.

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| துணர் ௰உ | தாது, சித்திரை | மலர் க |
| --- | --- | --- |

உ

## வாழ் நாள்

திரு. வித்துவான், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், போர்டு உயர்தரக்கலாசாலை, திருவத்திபுரம்

உலகின்கண் தோன்றி, நின்று, மடியும், உயிர்கள் உடலோடு தோன்றி நிலவுதலைக் காண்பவர், "இவ்வுயிர்கள் வாழ்கின்றன," என்றும், தான் நின்ற உடம்பின் நீங்கி உயிர்பிரிந்த வழி, "இவ்வுயிர்கள் வாழ்நாள் முடிந்தன," என்றும் வழங்குவர். இவ்வழக்கம், "வாழ்நாள்" என்னும் தொடர்க்கு உயிர் உடலோடு கூடியுறையும் காலம்" என்னும் பொருளைத் தருகின்றது. உடலோடு கூடியுறையும் உயிர், அவ்வுடலைத் துணைகொண்டு வினைசெய்யுமிடத்து நுகரும் இன்பம், துன்பம் என்னும் இரண்டனுள் இன்பமே மிக்கு அவ்வுயிரால் நுகரப்படும்போது, "இவ்வுயிரின் வாழ்வே வாழ்வாகும்" எனச் சிறப்பித்தும், ஏனையது மிக்க வழி, "இவ்வுயிரின் வாழ்வு வாழ்வாகாது" என்றும் கூறும். கருத்துப் பற்றி, "முப்பது வருஷம் வாழ்ந்தவரும்,

முப்பது வருஷம் வாழாதவரும் உலகில் இல்லை'' எனப் பலரும் வழங்குப. இவ்வழக்கத்திற்பெறும் வாழ்விற்கும், மேற்கூறிய வழக்கத்திற்பெற்ற வாழ்விற்கும் பொருண்மைக்கண் வேறுபாடு புலப்படுவதுபோலத் தோன்றினும், நுணுகி நோக்குமிடத்து, பொருணிலையில் இரண்டற்கும் வேறுபாடின்மையும், வேறு பட்டனபோற் றோன்றுதற்குக் காரணம் பயனையும் உடன் கொண்டு நோக்குதலும் விளங்குகின்றன. ஆகவே, வாழ் நாளாவது உயிர் உடலோடுகூடி உறையும் காலத்தையே உணர்த் துவதென்று துணிக. ஆசிரியர் பரிமேலழகரும், "வாழ்நாள் வழியடைக்குங்கல்'' (குறள். 38) என்றவிடத்து, "வாழ்நாள்'' என்றதற்கு "யாக்கையோடு கூடுநாள்'' என்றே பொருள் கூறினர்.

இனி, நாளாவது காலத்தின் கூறுபாடுகள் பலவற்றுள்ளும் ஒன்றற்குப் பெயராயினும், ஈண்டுக்காலம் என்னும் பொதுப் பொருளையே உணர்த்துகின்றது. காலமாவது தமிழிற் பொரு ளிலக்கணத்துட் கொள்ளப்படும் நிலம், பொழுது எனப்படும் முதற்பொருள் இரண்டனுள் பொழுதாகும். சமய நூல்களில் அசுத்தமாயா காரியமெனப்படும் காலம், நியதி முதலிய தத்து வங்களுள் ஒன்றாகக் கூறப்பெறும் காலம் என்பதும் இதுவே யாகும்.

இனி, "ஒரு பொருளின் பண்பும் தொழிலுமல்லதுகாலம் என்ற சொல்லுக்கு ஒருபொருட் பேறில்லை'' என்று சொல்லுப வரும் உண்டு; ஆயினும், அகத்தியமுனிவர் காலமுண்டென்பது அருமறையகத்தேயும் கூறப்பட்டதென, "உலக வழக்கமொரு முக்காலமும், நிலைபெறவுணர்தரு முதுமறைநெறியால்'' என்ற சூத்திரத்தாற் கூறினர்; மேலும், முன் பிறந்தான், பின் பிறந் தான், மூத்தான், இளையான் என்பனவற்றை உதாரணங் காட்டிக் காலம் உண்டு என்பவரும் உளர் என்று பிரயோக விவேக நூலார் கூறுவர். மற்று, ஆசிரியர் சிவஞானயோகிகள் காலம் என்றொருபொருள் இல்லையென்பவர் புத்தர் முதலியோர் என்றுகூறி, "மாந்தளிர் முதலியன இளவேனிற்கால முதலிய வற்றினன்றி உற்பத்தியாகாமையும், முல்லைப்பூ முதலியன

கார்கால முதலியவற்றினன்றி உற்பத்தியாகாமையும், நசித்தலும் அவ்வக்காலம் வந்துழியன்றி நசியாமையும் காண்டும். காலம் இல்லையென்பார்க்கு அவ்வக்காலம் இன்றியும் அவையவை உற்பத்தியாய், உற்பத்தியானபொழுதே எல்லாப்பொருளும் நாசம் எய்தவும் வேண்டும். அங்ஙனங் காணமையானும், செய்த * வினைக்குப் பயன் நீட்டித்து வருதலானும், 'ஒரு கணத்திற்றோன்றும், ஒரு கணத்தில் அழியும்,' என்று வழங்கப் படுதலானும், இன்னோரன்னவற்றிற்குக் காரணமாகிய காலம் உண்டென்பது தெற்றெனவுணர்க,'' என்பர்.

இங்ஙனம், உண்டெனத் துணிந்த காலம் ஒன்றே என்பர் சிலர். அவர் நையாயிகர் முதலியோர் என்று கூறி, "காலம் ஒன்றாயின் நடத்தல் முதலிய தொழில்களும் இறப்பு நிகழ்வு முதலியவற்றான் வேறுபடுதலின்றி, ஒன்றே யாதல்வேண்டும்; அவ்வாறன்றி, இறப்பு, நிகழ்வு முதலியனவாய் நிகழும் தொழிற் பாகுபாட்டிற்குக் காரணம் காலத்தினது பாகுபாடேயாகலின், காலம் பலவாதல் அறிக,'' என்றனர் வண்டமிழ் மாபாடியங் கூறிய சிவஞான வள்ளல். இப்பெருமானார், இம்மட்டில் நில்லாது, காலத்திற்கு இறப்பு முதலிய பாகுபாடு ஞாயிற்றின் செலவு முதலியவற்றானாகிய செற்கையே என்பார் கூற்றினையும் ஆசங்கித்து, "நாழிகை, நாள், பக்கம், திங்கள், பருவம், அயனம், ஆண்டு என்றற்றொடக்கத்துக் காலப் பாகுபாடு மாத்திரையே ஞாயிற்றின் செலவு முதலியவற்றானாய செயற்கையாவதன்றி, இறப்பு, நிகழ்வு, எதிர்வு, கணம், இலவம் என்றற்றொடக்கத்துக் காலப்பாகு பாடுகள் ஞாயிற்றின் செலவு முதலியவற்றானாகிய செயற்கையல்லவாகலான், இயற்கையான், இறப்பு நிகழ்வு என்றற்றொடக்கத்துப் பலவேறு வகைப்படும் காலம் ஒன்றுமாறு யாண்டையதென்க'' என்று கூறியருளினவர், மேலும், "ஒரு காலத்திற்றானே உடைந்த குடத்தைநோக்கி இறந்த காலமெனவும், பிறந்த குடத்தைநோக்கி நிகழ்கால மெனவும், பிறக்கக் கடவதாகிய குடத்தைநோக்கி எதிர்கால மெனவும் வழங்கக்காண்டும். அங்ஙனம் வழங்குதல்பற்றிக் காலந் தம்முள் வேறாகாமையும் காண்டுமாகலின், இறப்பு,

நிகழ்வு முதலிய வேறுபாடுபற்றிக் காலம் பலவென்றல் சாலாதெனின்!—அற்றன்று; ஒருவன் தானே தந்தையை நோக்கி மகனும், மகனை நோக்கித் தந்தையுமாதலும், நெடியனை நோக்கிக் குறியனும், குறியனை நோக்கி நெடியனுமாதல்போல, பலவேறு வகைப்பட்ட பொருள்களை நோக்கிப் பலவேறு வகைப்பட வழங்கும் இறப்பு முதலியன மாறுபட்ட தன்மைய வல்லவாகலின், அவற்றை நோக்கிக் காலம் ஒன்றேயாயினும், ஒரு குடத்தின் கண்ணவாகிய இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்பன மாறுபட்ட தன்மையவாதல் காட்சிப் புலனாகலின், அவற்றைநோக்கி காலம் பலவாதல் சாலும் என்க,'' என்று விரித்துரைத்தருளினர். இவ்விரிவுரையாற் காலம் உள்ளதே என்பதும், அது பலவாமென்பதும் பெறப்பட்டனவாம்.

ஒருபொருள் மற்றொரு பொருளொடு தொகுமிடத்து, அவ்விரண்டற்கும் தொடர்பொன்றும் இல்லையேல் தொகுதல் ஆகாதென்பது யாவரும் அறிந்தது. அப்பொருளிடமாக நிகழும் சொற்களும் அன்னவாகலின், வாழ்நாள் என்ற தொகைச்சொற்கண் வாழ்தல் என்ற வினையும், நாள் என்னும் பெயருந்தொக்கு நிற்றற்குரிய தொடர்புவேண்டும். அத்தொடர்புகள் பலவாயினும், ஆசிரியர் தொல்காப்பியனார் வினைச்சொல் பெயர்ச்சொலொடுதொக்கும், எச்சமாய் நின்று பெயர்கொண்டும் முடிதற்கு ''நிலனும் பொருளும் காலமும் கருவியும், வினை முதற் கிளவியும் வினையுமுளப்பட, அவ்வறு பொருட்கும் ஓரன்னவுரிமைய'', (தொல். சொல். 234) என்னும் சூத்திரத்து நிலம் முதலியன தொடர்புடைய என்றனராகலின், இத்தொகைச் சொல்லினும் வாழ்தல் வினைக்குரிய காலம் முடிக்குஞ் சொல்லாய், வினையொடு தொக்கு ஒரு சொல்லாய் நிற்பதாயிற்று. ஆகலின், வினைக்கும் காலத்துக்கும் தொடர்புண்மையும் பெற்றும்.

உயிர்கள் உணருந் தன்மையுடையவாகலின் வினை முதலாதற்குரியனவாகும். இன்ப துன்பங்களை யுணர்தலும் நுகர்தலுமே உயிருணர்வின் பயனாகலின், அவ்வுயிர்கள் அவற்றைப் பெறுதற்குரிய வினைகட்கு வினைமுதலாகின்றன. உயிர்கள்

உடலோடு கூடுதலே வினைப்பயனாகிய இன்பதுன்பங்களை நுகர் தற்பொருட்டேயாகலின், உடலோடு ஒன்றிய உயிர்தோன்றும் பொழுதே வினையும் உடன் தோன்றுகின்றது. அங்ஙனம் தோன்றும் வினைக்கு அது வினைமுதலாய், அவ்வினையை நிகழ்த்து மிடத்து அதன் பயன் தோன்றாதொழிதல் ஒருகாலுமில்லை. ஆதலால், தான் நுகர்தற் பாலதாகிய வினைப்பயன் குறித்து உயிர் வினை முதலாதலும் வினையுளதாதலும் ஒருதலையென்று கோடல்வேண்டும். அங்கு உளதாகத் துணிந்த வினைமேல் வினைமுதலாகிய உயிர்கள்சென்று அதனைச் செய்தற்குரிய நெறியினைச் சமய நூல்கள் கலாதத்துவம் என்றும் கூறும். உயிர்கட்கு அறிவு, இச்சை, தொழில் என மூன்று நிலையுண்டென்றும், அவ்வுயிர்கள் வினைப்பயன் நுகர்தல் கருதித் தொழின்மேற் செல்லுமாறு அத்தொழில் நிலையை விளக்குவது இக்கலாதத்துவமாகும் என்றும் கூறுப. வினை, தொழில், செய்கையென்பன ஒரு பொருளன.

இனி, கலையால் விளக்கமுற்று வினைபுரிவான் வினை முதலாகிய உயிர்க்கு வேண்டுவது வினைப்பயனேயன்றி வேறு ஒன்றும் அன்று. அப்பயனை விளைக்கும் வினை, அதற்குக் காரணமாயினும், அதனை வரையறைப்படுத்து, உயிரை நுகர்விக்குமிடத்து, காலம் பெருந்தொடர்பு பெறுகின்றது. இப்பெருந்தொடர்பு தானும் துணைக்காரணத் தொடர்பேயாம். ஒருவன் தன் நுகர்ச்சிக்கென ஈட்டிய பொருள் மலையெனக் குவிந்தகாலையும், ஒருநாளை நுகர்ச்சி, இருநாளை நுகர்ச்சியெனக் காலத்தால் வரையறை செய்யப்பட்டு அந்நுகர்பொருள் கழிதலை நாடோறும் நாம் காணுதலின், பயனாகிய நுகர்பொருளைக் காலம் நுகர்விக்கும் துணைக்காரணமாய் நிற்றல் அறியப்படுகின்றது. அன்றியும், ஒரு வினை தொடங்கியவுடனே பயன் காண்டல் இன்மையின், அது தொடங்கி, நிலவி, முடிதற்கும் காலம் துணைசெய்தலின், வினைநிகழ்ச்சிக்கும் காலம் துணைக்காரணமாதல் பெறப்படும். இதுபற்றியே, "அருத்திமிகும் கலைகால நியதியுடன் வித்தையராகமிவை அனந்தரான் மாயை தனிலாகும்" எனச் சிவப்பிரகாசம் என்னும் தண்டமிழ் நூலும், "கலாதத்து

வம், காலமும் நியதியும் தனக்குத் துணைக்கருவியாகக்கொண்டு, முதற்காரணமாய் நின்று, வித்தை, அராகம் முதலிய தத்துவங்களெல்லாவற்றையும் தன்பால் நின்றும் தோற்றுவிக்கும்,'' எனத் தத்துவப் பிரகாசம் என்னும் வடநூலும் ஓதுகின்றன. தொல்காப்பியமென்னும் செந்தமிழ் இலக்கணமும், "வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது நினையுங்காலைக் காலமொடு தோன்றும்'' என்றும், காலமொடு தோன்றுதனபோல் தோன்றும் குறிப்புவினையும் நினையுங்காற் காலமொடு தோன்றுமென்பதனை "நினையுங்காலை'' என்ற இலேசினால் எய்துவித்து, "அம்முக்காலமும் குறிப்பொடுகொள்ளும், மெய்ந்நிலையுடைய'' எனவரும் சூத்திரத்தால் யாப்புறுத்தும் கூறுவதாயிற்று.

இனி, வினைக்கும், வினைப்பயன் நுகர்ச்சிக்கும் துணைக் காரணமாய் நிற்கும் காலம், வினையின் திட்பநுட்பங்கட்கும், வினைப்பயன்களின்பெருமை சிறுமைகட்கும் தக நீண்டும் குறுகியும் நிலவும் என்பது போதரும். ஒரு வினைமுதல் ஈட்டிய வினைப்பயன் பெரிதாயவழி, அதுதான் நின்ற உடலோடு நெடிது நின்று அதனைத் துய்த்துத் தீரும்; அப்பயன் கழியுமளவும் அதனை வரையறை செய்து அவ்வுயிரை நுகர்வித்தல் வேண்டுதலின், அதன் வாழ்நாள் நீடுதல் தானே அமையும். இதனை நினையாது ஒருயிர்க்கு வாழ்நாள் இத்துணை என வகுத்தல் வாய்மையாகாது கழிதல் பெரும்பான்மை.

ஒருயிர் நுகர்தற்குரிய வினைப்பயனும், அதற்குரியவினையும் அவ்வுயிரால் அறியமுடியாமையின், வாழ்நாளை வரையறுத்துக் கூறுதல் கூடாமையின்பாற் படுவதாயிற்று. முற்றத்துறந்த முனிவரும், கற்றுத் துறைபோகிய காட்சியரும் இந்நெறியில் மயங்குகின்றனர். நெடிது வாழலாமெனக் கருதுமோருயிர், கடிதுபொழுதில் உடல் விட்டேகுதல் நாடோறும் நிகழும் நிகழ்ச்சியாயிற்று. இதனைக் கண்ணுற்றே நம் வன்றெண்டப் பெருந்தகையார்,

"ஒன்றலா வுயிர்வாழ்க்கையை நினைந்திட்
டுடல்தளர்ந்தருமா நிதியியற்றி

என்றும் வாழலாம் எமக்கெனப் பேசும்
இதுவும் பொய்யெனவே நினையுளமே''

என்றும், திருவாரூர்ச் செல்வனர்,

"தந்தையார் தாயாருடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தாமாரே
வந்தவாறெங்ஙனே போமாறேதோ
மாயமாம் இதற்கேது மகிழவேண்டா''

என்றும், சீகாழிப் பிள்ளையார்,

"மற்றிவ் வாழ்க்கை மெய்யெனும்
மனத்தினைத் தவிர்ந்துநீர்
பற்றிவாழ்மின் சேவடி
பணிந்துவந் தெழுமினோ'' (கோடிகா. 8.) என்றும்

கூறிப்போயினர்.

இனி, இக்காலத்தையும் ஒருவாறு துணிந்து கூறுதலுமுண்டு. இத்துணிபிற்குரிய பொருள்கள் திண்ணியவாய்க் கிடைத்திலவாயினும், உயிர்களுட் பல நெடிது வாழ்தலைக்கண்டு அந்நெடுவாழ்வின் முறையே பிறவுயிரும் வாழலாம் என எதிர் நோக்கிக் கூறுவதேயாம். அளவைகளாலும் பொருந்துமாற்றாலும் பொருள்களையாராய்ந்து கூறிய தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரும் "நெருநல் உளன் ஒருவன் இன்றில்லையென்னும், பெருமை யுடைத்திவ்வுலகு'' என்றதையன்றி, வாழ்நாளெல்லையை வரையறுத்துக் கூறிற்றிலர். "வேதநூற் பிராயம் நூறு'' என ஓதிய பெரியார் வாய்மொழியினையும், பிறவாழ்க்கை நிலைகளையும் கண்டு மக்களுயிர்க்கு வாழ்நாளெல்லை நூறாண்டாகும் என்ப.

இனி, மேனாட்டார் கருதிக் கூறுவனவற்றை யாராய்வாம்: மக்களுயிருள் ஒன்று உலகிற்றோன்றித் தானே தன் வாழ்க்கையைத் தொடங்குதற் கெய்துங்காலம் அதற்குரிய வளர்ச்சிக் காலமாகும். அக்காலத்திற்குவேண்டும் யாண்டுகளின் தொகையினை ஆறுதல் எழாதல்கொண்டு பெருக்கியவழியெய்துமியாண்டுகளின் தொகை அவ்வுயிர் உடலோடுகூடி வாழுங் காலநிலை

யென்று ஒரு முடிபுகொண்டு, மேனுட்டறிஞர் பலர் வாழ்நாளெல்லையை வரையறுக்கப் புகுந்தனர். அவருட்டலையாயவர் பபூன் என்பாராவர்.

அவர், "மக்கள் வளர்ச்சிக்குரிய வாலப்பருவம் பதினைன்காண்டுகளாதலின், அவர் தம் வாழ்நாளும் எண்பத்து நான்காண்டாதல் தொண்ணூற்றெட்டு யாண்டுகளாதல்வேண்டும்," என்று கூறினர். அவர் கூற்று, நூருண்டென்பார் கூற்ருேடு நெருங்குதலின், உடன்படற்பாலதாயினும், வளர்ச்சிக் காலமாகிய வாலப்பருவத்துக்கு வகுத்த யாண்டுகள் சாலா. அவ் "வாலப்பருவம்" பதினைன்கினும் மிக்க யாண்டுகள் வேண்டி நிற்பதை இன்றும் காணலாம். அன்றியும், மக்களுட் பலர் தொண்ணூற்றெட்டியாண்டு கழிந்த காலையும் கட்டுக்குலையா உடல்வன்மையும், நிறப்பொலிவும் ஒளியும் உடையராய்த் திகழ்வார் உளராகலின், அவ்வரையறை வாழ்நாள் எல்லையாதற்கியைவதன்ரும்.

இவர் கூற்றினுல் ஊக்கப்பெற்றெழுந்த பிளாரன்ஸ் என்பார், மக்களுயிரோடு விலங்கினங்களின் உயிரையும்கொண்டு, உயிர்கட்குரிய வாழ்நாளெல்லையை வரையறைசெய்யத் துணிந்தார்.

| விலங்கினம். | வாலப்பருவம். | வாழ்நாளெல்லே. |
|---|---|---|
| ஒட்டகம் | 8 ஆண்டு | 40 ஆண்டு |
| குதிரை | 5 ,, | 25 ,, |
| ஆனேறு | 4 ,, | 15, 20 ,, |
| அரியேறு | 4 ,, | 15, 20 ,, |
| நாய் | 2 ,, | 10, 12 ,, |
| மக்கள் | 20 ,, | 100, ,, மிகுதி. |

இவற்றை நோக்குமிடத்து, பபூன் என்பார் கூறியதுபோலாது, வளர்ச்சிக்குரிய யாண்டுகள் வாழ்நாளெல்லைக்குவேண்டும் யாண்டுகளுட் சற்றேறக்குறைய ஐந்தனுள் ஒரு பகுதியாமென்பது பெறப்படுகின்றது.

(தொடரும்.)

# தமிழ்ப் பத்திரிகையின் வரலாறு

திரு. ப. கலியாணசுந்தரம் பிள்ளை, அவர்கள், B. A. (Hons.)

நாகரிகத்திற் சிறந்து விளங்கும் நாடுகளில் பத்திரிகை ஓர் சிறந்த கருவியாக நின்று நிலவுகின்றது. சரித்திர வாயிலாக ஆராயும்பொழுது சிறுமையுற்று சீரழிந்த நாடுகள் பத்திரிகையின் உதவியால் பெருமையுற்று விளங்கக் காண்கின்றோம். பசியாலும் பிணியாலும் நலிந்த நாடுகள், பத்திரிகையின் ஆற்றலால் வசியும், வளமும் சிறந்து மிளிரக் காண்கின்றோம். செல்வரே மேலோர் என்றும் வறியவர் கீழோர் என்றும் வழங்கிய கொள்கை நிலையழிந்து வீழக்காண்கின்றோம். மேற்பிறந்தார் மேலோர் என்றும் கீழ்ப்பிறந்தார் கீழோர் என்னும் முன்னையோர் வகுத்த முறை சின்னபின்னமாகக் காண்கின்றோம். எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே, நல்லோர் பெரியர் என்னும் காலம் வந்ததே, என்று எல்லோர் நெஞ்சங்களும் துள்ளி மகிழக் காண்கின்றோம். இத்தகைய நிகழ்ச்சிகளெல்லாம் பத்திரிகைகளாலேயே நிகழ்கின்றன என்று கருதுவது மிகையாகாது. பத்திரிகையின் வலிமையை நன்குணர்ந்த மேல்நாட்டு மக்கள், அதன் பெருமையை மனமாரப் புகழ்ந்து போற்றியுள்ளார்கள். படைவீரர் கையிலமைந்த வாளினும் பத்திராசிரியர்கள் எழுதுகோலின் வன்மை பெரிதென்று ஓர் ஆங்கிலப் பழமொழி கூறுகின்றது. ஆக்குந்திறமும் அழிக்குந் திறமும் பத்திரிகையின்பால் அமைந்திருத்தலால், நாகரிகமுற்ற நாடுகளில், பத்திரிகைகள் பொன்போற் போற்றப்படுகின்றன.

இத்தகைய வன்மையைத் தன்னகத்தே கொண்ட பத்திரிகை, தமிழ் நாட்டில் தோன்றி வளர்ந்த வரலாற்றைச் சுருக்கமாகக் கூறுவதே இக்கட்டுரையின் கருத்தாகும். தென்னாட்டில் தொன்றுதொட்டு வழங்கி வந்த மொழி தமிழ் மொழியே என்பது யாவரும் அறிந்த உண்மையேயாம். தமிழ்மொழி மிகத் தொன்மையும், செம்மையும் வாய்ந்த மொழியேயாயினும், அம்

மொழியில் எழுந்த நூல்கள், பெரும்பாலும் பாட்டாக இருந்தமையால், கற்றோர்க்கேயன்றி மற்றோர்க்கு அவை பயன்படாதனவாயின. ஓர் நாட்டில் பத்திரிகை தோன்றி வளர்வதற்கு அடிப்படையாக இருப்பது செவ்விய உரை நடையே யாகும். சங்க நூல்களிலும், சங்க காலத்திற்குப் பின்னெழுந்த நூல்களிலும், சிறுபான்மை வசனநடை காணப்படினும், பாட்டில் நூல் செய்யும் வழக்கே பெருவழக்காகத் தமிழ்நாடு முழுதும் பரவியிருந்தது. ஆதியில் எழுந்த அகத்தியமும், அதன் பின் எழுந்த தொல்காப்பியமும் நூற்பாவடிவமாக உள்ளன. சங்கத்துச் சான்றோர் செய்த பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்று போற்றியுரைக்கப்படும் நூல்களும் பாவடிவமாக அமைந்துள்ளன. சொற்பொருள் உணர்த்தப்போந்த நிகண்டுகளும் பாட்டாகவே அமைந்துள்ளன. ஆகவே தமிழ் மொழியிலமைந்த பழைய இலக்கணங்களும் இலக்கியங்களும் நிகண்டுகளும், பிறவும் பாவடிவிலேயே அமைந்தன என்பது யாவருக்கும் இனிது விளங்கும், ஆயினும் இடையிடையே வசனமில்லாமற் போகவில்லை. சிலப்பதிகாரம் என்னும் சிறந்த காப்பியத்தில், இடையிடையே, உரைநடை அமைந்திருக்கக் காண்கின்றோம். இன்னும் சில பழைய நூல்களிலும் வசனம் விரவியிருப்பதாக அறிகின்றோம். இதனால் பாட்டு வசனம் என்னும் இருவகை நடைகளையும் தமிழ் நாட்டார் நெடுங்காலத்திற்கு முன்னரே அறிந்திருந்தாரென்பதும், இவ்விரு நடைகளிலும் பாட்டு நடையையே போற்றி வளர்த்தார்களென்பதும் நன்கறியப்படுகின்றது. தமிழ் மொழியின் வரலாற்றை நோக்கும் போது, சென்ற நூற்றாண்டுகளாகவே வசனநடை வளர்ந்தோங்கி வருகின்றதென்பது இனிது புலப்படும்.

முதன் முதல் வசன நூல்கள் எழுதத் தலைப்பட்ட புலவர்கள், பெரும்பாலும் செய்யுள் நடையை ஒத்த உரைநடையே இயற்றினார்கள். இயன்றவரை இயற்சொற்களை விடுத்து எதுகை மோனைகளை எடுத்தடுக்கி, இன்னோர் செய்த வசன நூல்கள், கற்றோர்க்கேயன்றி மற்றோர்க்கு விளங்காதனவாக அமைந்தன. ஆயினும், காலம் செல்லச் செல்ல, இலக்கணக்

கட்டமைந்த இறுகிய உரை நடை இளகி, நெகிழ்ந்து எளிதாக இயங்கத் தொடங்கிற்று. இக்காலமே பத்திரிகைகள் தோன்றுவதற்கு ஏற்றகாலமென்பது சொல்லாமலே யமையும்.

தமிழ் மொழியிற் காணப்படும் பத்திரிகைகளை ஐந்தாறு வகைகளாக வகுத்துக் கூறலாம். தமிழ்மொழி வளர்த்தலே தலையாய நோக்கமாகக்கொண்டு சில பத்திரிகைகள் எழுந்துலாவுகின்றன. இவற்றை (Literary Journals) இலக்கியப் பத்திரிகைகள் என்று கூறலாம். இன்னும் தென்னாட்டில் வழங்குஞ் சிறந்த சமயநெறிகளாகிய சைவம் வைணவம், முதலிய சமயங்களை வளர்த்தலே சிறந்த நோக்கமாகக் கொண்டு சிலபத்திரிகைகள் தோன்றின. அவற்றை (Religious Journals) சமயப் பத்திரிகைகள் என்று கூறலாம். இன்னும் தென்னிந்திய சமுதாயத்தில் காணப்படும் குறைகளை நீக்கி, சமுதாய சீர்திருத்தம் செய்யுமாறு எழுந்த பத்திரிகைகள் சில; இவற்றை (Social Reform Journals) சமுதாய சீர்திருத்தப் பத்திரிகைகள் என்று கூறலாம். இன்னும் தென்னாட்டில் தோன்றி நிலவும் சாதிகள் அல்லது பகுப்புகளின் குல நலம் பேணக் கருதி எழுந்த பத்திரிகைகள் சில. இவற்றை (Communal Journals) வகுப்பு முன்னேற்றப் பத்திரிகைகள் என்று வழங்கலாம். இவ்வாறு உயரிய பொது நலம் குல நலங்களில் தலையிடாது விகடவினோதம் பேசி நகை விளைக்கும் பத்திரிகைகள் சில, இவற்றை விகடப் பத்திரிகைகள் என்று கூறுதலமையும். இனி தேசிய முன்னேற்றமே குறிக்கோளாகக் கொண்டு, அரசியற் சீர்திருத்த முறையில் ஆர்வமுற்றுரைக்கும் பத்திரிகைகள் சில; இவற்றைத் தேசியப் பத்திரிகைகள் என்று கூறலாம்.

இவ்வாறு அறுவகைப்பட்ட பத்திரிகைகளின் பண்பினை இனி ஒருவாறு ஆராய்வாம். இலக்கியப் பத்திரிகைகளை எடுத்துக்கொள்வோம். இப்பொழுது தமிழகத்தில் நான்கு சிறந்த இலக்கியப் பத்திரிகைகள் உலாவி வருகின்றன என்று தெரிகின்றது. புலவர் பாடும் புகழமைந்த மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் வெளியிடப் படுகின்ற "செந்தமிழ்" ஒன்று. தென்பாண்டிநாடாகிய திருநெல்வேலியிலமைந்த, தென்னிந்திய

சைவ சித்தாந்த சபையின் ஆதரவில் வெளியிடப்படுகின்ற 'செந்தமிழ்ச் செல்வி, ஒன்று. தஞ்சையை அடுத்த கரந்தைமா நகரில் களித்திலங்கும் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் வெளிவந்துலவும் 'தமிழ்ப் பொழில், ஒன்று. சென்னைமா நகரில் கலாநிலயம் என்னும் பெயரோடு கலைவளர்க்கும் பத்திரிகை ஒன்று. ஆகிய இவை நான்கும் இவைபோல்வன பிறவும், சொல்நயம், பொருள் நயம் ஆர்ந்த தமிழ் நூல்களின் அழகினை இனிய முறையில் எடுத்துரைத்து நாட்டில் புதியதோர் ஊக்கத்தை எழுப்பும் நன் நோக்கத்தோடு தோற்றுவிக்கப்பட்டனவாம். ஆயினும், இவ்விலக்கியப் பத்திரிகைகள் இன்னும் தமிழ்நாடெங்கும் பரவிப் பெரும் பயன் விளைக்கவில்லையென்று கூறுதல் குற்றமாகமாட்டாது. இந்நான்கு பத்திரிகைகளில், மூன்று, பொருள் நலம் படைத்த சங்கங்களினாதரவைக் கொண்டுள்ள காரணத்தால் இன்றுகாறும் இறவாது நின்று நிலவுகின்றன. இப்பத்திரிகைகளின் சந்தாதார்களை நூற்றுக் கணக்காக எண்ண வேண்டுமேயன்றி ஆயிரக்கணக்காக எண்ணக்கூடிய நிலையிலில்லை. இப்பத்திரிகைகளில் புலவர் பெருமக்கள் ஆராய்ச்சித்திறத்தாற் கண்ட அரும்பெரும் பொருளமைந்த கட்டுரைகள் வெளிவருவது உண்மையேயாம். இருபதாண்டுகளுக்கு மேலாக நிகழ்ந்துவரும் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளிவந்த வியாசங்கள் பல, நூல்களாத் தொகுக்கப்பட்டுள்ளன; அவ்வாறே செந்தமிழ்ச் செல்வி முதலிய பத்திரிகைகளும், தண்டமிழ்மொழிக்குத் தலையாய அன்பு கூர்ந்து உலையாத ஊக்கத்துடன் உழைத்து பல அரிய பெரிய ஆராய்ச்சி நூல்களைத் தந்தன. ஆயினும், இப்பத்திரிகைகள் சிலர்க்கேயன்றி பலர்க்குப் பயன்படாத பான்மையின் அமைந்த காரணத்தை ஆராய்தல் நம்கடமையாம்.

இழுமென் மொழிகளால் இயன்ற விழுமிய நூல்களின் எழில் நலங்களை, இனிய எளிய கட்டுரைகளில் எழுதுவோமாயின் அவற்றைப் பல்லோரும் விரும்பிப் படிப்பர். அவ்வாறன்றி இறுகிய நடையும் கருகிய போக்கும் படிப்போர் மனத்தில் சலிப்பை விளைவிப்பனவாம். மேற்கூறிய இலக்கியப் பத்திரிகைகளில் இத்தகைய கடுநடை பயில்கின்றமையால் அவை

சிலர்க்கே பயன்படுவனவாய் சிறிய உலகத்தே உலாவி வருகின் றன. இலக்கணம் கற்றுணர்ந்த பண்டிதர்களேயன்றி மற்றை யோரும் தமிழ் இலக்கியச் சுவையறிந்து தமிழ்மொழியைப் போற்றவேண்டுமாயின் இப்பத்திரிகைகள் இன்னும் எளிய நடையில் இயங்கவேண்டுமென்பது எனது கொள்கை.

இனி தமிழ் நாட்டில் வழங்கும் சமய நெறிகளை வளர்க்கக் கருதி எழுந்த பத்திரிகைகளின் தன்மையை ஆராய்வாம். இத் தமிழகத்தில் சைவமும் வைணவமும் நெடுங்காலமாக நிலைத் துள்ளன செந்தமிழ்ச் சுவைநிரம்பிய சிலப்பதிகாரத்துள்

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்" நின்று நிலவின

என்று கூறப்படுதலால் சைவ நெறியும் வைணவ நெறியும் இந் நாட்டுத் தொன்னெறிகளென்பது சொல்லாமலே அமையும்.

"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேயமைவரை யுலகமும்" என்று எழுந்த

தொல்காப்பிய அடிகளானும் இவ்வுண்மை வலியுறுத்தப்பெறும். சங்க காலத்தில் நிலவிய சமண மதமும், சாக்கிய மதமும், இடைக்காலத்தில் இந்நாட்டைவிட்டகன்றன. சில நூற்றாண்டு கட்கு முன்னர் வடநாட்டில் மகம்மதியர் ஆட்சி நிலைத்தபொழுது மகம்மதிய மதம் தென்னாட்டில் பரவுவதாயிற்று. அப்பால் ஆங்கில அரசாட்சி நிலைபெற்ற பொழுது அந்நாட்டினர் மேற் கொண்ட கிரிஸ்துவ மதமும் தமிழ் நாட்டில் தலைப்படுவதா யிற்று. இவ்வாறு பல சமய நெறிகள் உலாவும் தமிழ் நாட்டில் தத்தம் சமயத்தைப்போற்றி வளர்க்க ஆர்வமுற்று, அறிஞர் கள் சமயப் பத்திரிகைகள் தொடங்குவாராயினர். சென்னைமா நகரில் இருபத்தைந்தாண்டுகட்கு முன்னர் சைவசித்தாந்த சமா ஜம் என்னும் சங்கம் நிறுவப்பெற்று அதன் ஆதரவில் "சித் தாந்தம்" என்னும் சமயப் பத்திரிகை நிகழ்ந்து வருகின்றது. வெள்ளிவிழா நடத்தும் பேறுபெற்ற சில பத்திரிகைகளில் இதுவும் ஒன்றாயிருத்தல் குறிப்பிடத் தக்கதாகும். இன்னும் 'லோகோபகாரி' யென்னும் வாரப்பத்திரிகையும் பல்லாண்டு

களாகச் சமயத்தொண்டு புரிந்து வருகின்றது. சென்னைக்கடுத்த பல்லாவரம் என்னும் சிற்றூரில் சாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகள் நடத்திவரும் 'ஞானசாகரம்' என்னும் சமயப் பத்திரிகை சிவமணமும் தமிழ் மணமும் தாங்கித் திகழ்வதாகும். இப்பத்திரிகையின் அருமை பெருமைகளையறிந்து தமிழ்நாடு போற்றாத குறை பெருங்குறையேயாகும். நான்காண்டுகட்கு முன்னர் தனவணிக நாடென்னும் செட்டி நாட்டிலுள்ள பலவான்குடியில் சிவநேசன் என்னும் சமயப் பத்திரிகை தோன்றுவதாயிற்று. அன்ன சத்திரங்களமைத்தலும், ஆலயங்கள் எடுத்தலும் சிறந்த அறமெனக் கருதி, அளவிறந்த பொருளைச் செலவு செய்து வந்த செட்டி நாட்டில், சில ஆண்டுகளாக சுயமரியாதை என்னும் சூறாவளி சுழன்றடிக்கின்றது. அதன் வெம்மையையும் வேகத்தையும் அடக்கி மீண்டும் சிவநெறியை விளக்கக் கருதி எழுந்த பத்திரிகையே சிவநேசன் என்பர். இந்நான்கு பத்திரிகைகளும், சிவநெறிக்குத் தொண்டு செய்வதுபோலவே தென்பாண்டி நாட்டில் தோன்றிய "வைஷ்ணவன்" என்னும் சமயப் பத்திரிகை, வைணவமத உண்மைகளை விளக்கும் மாதப் பத்திரிகையாக விளங்குகின்றது. இவ்வாறே மகம்மதிய மத உண்மைகளை தாருல் இஸ்லாம், சைபுல் இஸ்லாம், முதலிய பத்திரிகைகள் பரப்பி வருகின்றன. கிருஸ்தவமதக் கொள்கைகளை 'திருஇருதயத் தூதன்' 'சத்தியநேசன்' போன்ற பத்திரிகைகள் விளக்கிவருகின்றன. இன்னும் பிரமஞான சபையாரால் வெளியிடப்படும் பூர்ணசந்திரோதயம் முதலிய பத்திரிகைகளும் இராமகிருஷ்ண மடத்தினின்று வெளியிடப்படுகின்ற 'இராமகிருஷ்ண விஜயம்' என்னும் மாதப் பத்திரிகையும், சமயப் பத்திரிகைகளாகவே நிகழ்ந்துவரக் காணலாம்.

இனி தென்னாட்டில் வழங்கிவரும் சமயங்களிலும் சமுதாயங்களிலும் காணப்படும் ஒவ்வாத பழக்க வழக்கங்களை யொழித்து சீர்திருத்தும் நோக்கத்தோடு எழுந்த பத்திரிகைகள், பரபரப்புடன் பணிசெய்து வருகின்றன. சுயமரியாதை என்னும் இயக்கத்தை தோற்றுவித்த இராமசாமி நாயக்கர் என்பார் ஆசிரியராக இருந்து நடத்திவரும் குடியரசு என்னும் பத்தி

ரிகை சமயக் கொள்கைகளையும் சாதிக் கொடுமைகளையும் அஞ்சாது எடுத்துரைக்கின்றது. புதியன புகுதலும் பழையன கழிதலும் முறையே என்று கருதும் இப்பத்திரிகை வீரமும் வேகமும் பொருந்திய எளிய நடையில் வெளிவந்துலாவுவதால் அதன் கொள்கைகள் கற்போர் மனதைக் கவர்கின்றன. மாதரை அடிமைகளாக நடத்தும் மடமை ஒழிய வேண்டுமென்றும், காதல் மணமுறையே சாலச் சிறந்ததென்றும், எல்லாவுயிர்க்கும் பிறப்பு ஒக்கும் என்றும், இறைவன் பெயரால் நிகழும் ஏமாற்றம் தொலைய வேண்டுமென்றும், இப்பத்திரிகை இடித்துரைக்கின்றது. இதனடிச்சுவடுபற்றிச் செல்லும் 'குமரன்' என்னும் வாரப்பத்திரிகை செட்டி நாட்டில் சிறப்புற்று விளங்குகின்றது. பல்லாயிரம் ஆண்டுகளாக நிலைத்திருக்கும் பழக்கவழக்கங்களைத் தகர்த்தெரிவதற்கு வாரப்பத்திரிகைள் போதா என்று கருதி இப்பொழுது சண்டமாருதம் என்னும் ஒரு தினசரிப் பத்திரிகையும் வெளிவருகிறது. பெருமழை பொழியும் பொழுது பொங்கி எழும் காட்டாறு, நெறியிகந்து செல்லுதல்போன்று, புதிதாகத் தோன்றிய இயக்கத்தை ஆதரிக்கப்போந்த இப்பத்திரிகைகள், வரைகடந்து செல்லுகின்றன என்று சிலர் வருந்துகின்றார்கள்.

இனி, இந்நாட்டில் உலாவிவரும் சாதி முன்னேற்றப் பத்திரிகைகளைக்குறித்து சில சொற்கள் கூறுதல் அவசியமாகும். வடமொழி நூல்களில் கூறப்படுகின்ற நால்வகைச் சாதி, ஆதியில் தமிழ் நாட்டில் இல்லையென்றும் தொழில்பற்றி வேற்றுமைகள் இந்நாட்டில் தொன்று தொட்டு விளங்குகின்றன என்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

"பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்
சிறப் பொவ்வா செய் தொழில் வேற்றுமையால்" என்

னும் பொதுமறையை ஆதரவாகக்கொண்டு தமிழ் நாட்டில் பிறப்பினல் ஏற்றந் தாழ்வில்லையென்றும், தொழில் வேற்றுமையை அடிப்படையாகக்கொண்ட பாகுபாடுகள் தொன்றுதொட்டு நிலைத்திருந்தன என்றும் இன்னோர் கூறுவர். அன்று தொட்டு இன்றுகாறும் தமிழ்நாட்டில் வழங்கி வருகின்ற வகுப்புப் பெயர்களை ஆராய்ந்தால் இவ்வுண்மை இனிதறியப்படும். வேளாண்மைப் பணிசெய்வோர் வேளாளர் என்றும், பண்ணொடு பாடவல்லார் பாணர் எனறும், பறைசாற்றுவோர் பறையர் என்றும், தொழிலடியாகப் பிறந்த வகுப்புப் பெயர்களை நோக்கும்போது இவ்வுண்மை வலியுறுவதாகும். இவ்வாறு பல வகுப்பினராய்ப்

பிரிந்து வாழும் மக்களிடையே சென்ற பத்தாண்டுகளாக ஓர் சிறந்த இயக்கம் தோன்றி வளர்ந்து வருகின்றது. தாழ்ந்த வகுப்பாரென்றும் தீண்டத்தகாதாரென்றும் கருதப்படுகின்றவர்கள் சாதி வழக்குகளை உடைத்தெறிந்து சம உரிமைபெற்று முன்னேற்றமடைய முனைந்து நிற்கின்றார்கள். இவர்கள் முயற்சியை அரசாங்கம் ஆதரித்து வருகின்றது. 'எழுத்தறியத்தீரும் இழிதகைமை' என்னும் முன்னோர் மொழியை பொன்னெனப் போற்றி இவ்வகுப்பார் கல்வி நலம் பெற்று அரசியலில் உரிய இடம் பெறக் கருதுகின்றார்கள். அறியாமையில் ஆழ்ந்து கிடக்கும் தங்கள் இனத்தவரைத் தட்டி எழுப்புமாறு பத்திரிகைகள் நடாத்தி வருகின்றார்கள். நாடார் குலத்தைச் சேர்ந்த நன்மக்கள் மேம்படுமாறு நாடார் குலமித்திரன் தோன்றிற்று. முல்லை நில மக்களாய கோனார் குலத்தை வாழ்விக்கக் கருதி "யாதவ குலமித்திரன்" மதுரையில் எழுந்தது. இவ்வாறே கள்ளர் மறவர் முதலிய வகுப்பாரை உயர்த்தக் கருதி பாண்டிய மித்திரன் தோன்றிற்று. இத்தகைய பணியில் குன்றாத ஊக்கத்துடன் இவை உழைத்து வருகின்றன.

இனி, நாகரிகமுற்ற மேலை நாடுகளில் நகைச்சுவை மிகுந்த பத்திரிகைகள் அதிகமாக நடமாடக் காண்கின்றோம். மாந்தர்கள் நடையுடைகளிலும், பழக்க வழக்கங்களிலும், காணப்படுகின்ற குற்றங்கடிந்து சீர்திருத்தும் முறையில் இப்பத்திரிகைகள் சிறந்த கருவிகளாய் திகழ்கின்றன. நடையுடை பாவனைகளை சித்திரமாக எழுதிச் சிங்காரித்து, நகை விளைக்கும் பத்திரிகைகள் பல்லாயிரக் கணக்காக மேலை நாடுகளில் விற்கக் காணலாம். ஆயினும் நம் நாட்டில் இன்னும் இத்தகைய விகட விநோதப் பத்திரிகைள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. விகட தூதன் என்னும் விகடப் பத்திரிகை தோன்றி மறைந்தது. சென்னையில் பிரசுரிக்கப்படுகின்ற 'ஆனந்த விகடன்', 'விகட சக்கரம்', 'அமிர்தகுண போதினி' முதலிய பத்திரிகைகள், அரும்பணியால் தளர்வுற்று, இளைப்பாறக் கருதும் அறிஞர்க்கு ஆராயின்பமளிப்பனவாம். பாமரமக்கள் வேடிக்கை விநோதங்களை அதிகமாக விரும்புதலால் இக்காலத்திய பத்திரிகைகளிலெல்லாம் நகைச்சுவை அமைந்த துண்டுத் துணுக்குகள் அமைக்கப்பட்டிருக்கக் காணலாம். சிற்றுளியால் கல்லும் தகரும் என்னும் சிறந்த மொழிக்கிணங்க வேடிக்கைப் படங்களாலும் விநோதச் சொற்களாலும் பாமர மக்களை வழிப்படுத்துதல் சாலச்சிறந்த பணியென்று கூறுதல் மிகையாகாது.

(தொடரும்)

# கருதலளவைப் பகுதி.

திரு. த. இராமநாதபிள்ளை அவர்கள், சாவகச்சேரி, இலங்கை.

## 4-ம் அதிகாரம்.

(முற்றொடர்ச்சி துணர் 11. மலர் 11. பக்கம் 438.)

### 12. அப்பியாசங்கள்.

1. உண்மைத் துறைகளில் உத்தரபதம் உத்தரசாதனத்துப் பயனிலையாயிற் சாத்தியம் உடன்பாட்டுப் பொதுவாகாது. ஈண்டு நிரூபிக்க வேண்டியது என்னவெனின்:—

சாத்தியம் எதிர்மறையன்றேல் உடன்பாட்டுச் சிறப்பென்பதே. உத்தரபதம் உத்தரசாதனத்துப் பயனிலையானால், ஈந்திருக்கும்; அற்றேல் ஈயாதிருக்கும் சாதனத்துப்பயனிலையாகிய உத்தரபதம் ஈந்திருக்குமானால் அச்சாதனம் எதிர்மறையாக வேண்டும். ஆண்டுச் சாத்தியம் எதிர்மறையாகும். 6-ம் விதி இனி உத்தரபதம் ஈயாதிருந்தால் சாத்தியத்தும் ஈயாதிருத்தல் வேண்டும் (4ம்விதி) உத்தரம் சாத்தியத்தில் எழுவாயாகவிருக்குமாகையால் சாத்தியம் சிறப்பாதும்.

2. உண்மைத் துறைகளில், பூர்வபதம் பூருவசாதனத்தில் பயனிலையாகின், உத்தரசாதனம் உடன்பாடாகும். பூர்வபதம் ஈந்திருக்குமன்றேல் ஈயாதிருக்கும் பூர்வபதம் பயனிலையாகி ஈந்துமிருக்குமாயின் பூர்வசாதனம் எதிர்மறையாதல்வேண்டும். அங்ஙனமாயின் எத்தரம் உடன்பாடாதல்வேண்டும். 5ம் விதி இனிப் பூர்வபதம் சாதனத்து ஈயாதிருந்தால் சாத்தியத்தும் ஈயாதிருத்தல்வேண்டும். 4ம் விதி. பூர்வபதம் சாத்தியத்து ஈயாததாயும் பயனிலையாகவும் இருத்தற்கு சாத்தியம் உடன்பாடாதல்வேண்டும்.

### 13. முதனிலைத் துறைகள்.

முதனிலைத் துறைகளின் உண்மைப் போலிகளை ஆராய்ந்து காட்டுதும். பொது விதிகளான் போலியென் விலக்கப்பட்ட

எட்டுத் துறைகளும் ஒழிந்த, ஏனைய எட்டுத் துறைகளின் உண்மைப் போலிகளை ஆராய்வாம்.

1 உ, ம—ப பூர்வசாதனம்.
உ, எ—ம உத்தரசாதனம்.
உ, எ—ப சாத்தியம்.




மத்தியபதம் பூர்வ சாதனத்தில் ஈந்திருக்கிறது.

சாதனத்து ஈயாதபதம் சாத்தியத்தும் ஈயாத பதமாகவே இருக்கின்றது. ஈந்திராமத்தியும் கள்ளநடையும் இல்லை. ஆகவின் சாத்தியம் உண்மை ஊ, எ—வி என்பதைச் சாத்தியத்தினின்று உடன் கருதலாம். இது மென்மைத்துறை. (weakend mood.)

2 உ, ம—ப    எ, எ—ம

எதிர்மறைச் சாத்தியம் உண்டெனின் பூருவபதக் கள்ளநடை என்னும் போலி நிகழும். இதுப் போலித்துறை.

3 உ, ம—ப
ஊ, எ—ம
ஊ, எ—ப    உண்மைத்துறை




4 உ, ம—ப
ஏ, எ—ம
பூர்வபதக் கள்ள நடைப்போலி.

5 எ, ம—ப
உ, எ—ம
எ, எ—ப உண்மை.
ஏ, எ—ப மென்மைத்துறை.




6 எ, ம—ப
ஊ, எ—ம
ஏ, எ—ப உண்மை




7 ஊ, ம—ப
உ, எ—ம
ஈந்திராமத்திப்போலி (ஈயாமத்தி)

8 எ, ம—ப
உ, எ—ம
ஈந்திராமத்திப்போலி

முதனிலை உண்மைத் துறைகள் நான்கு. உஉஉ (முருகு) எஉஎ, உஊஊ, எஊஎ.

இரண்டாநிலை உண்மைத் துறைகள் நான்கு. எஉஎ, உஎஎ, எஊஎ, உஏஎ.

மூன்றுநிலை உண்மைத் துறைகள் ஆறு. உஉஊ (வன்மைத்துறை); ஊஉஊ, உஊஊ, எஉஏ, (வன்மைத்துறை), ஏஉஏ, எஊஏ.

நான்காம் நிலைத்துறைகள் ஐந்து. உஉஊ, உஎஎ, ஊஉஊ எஉஏ, எஊஏ.

## 14. முதனிலைச் சிறப்புவிதிகள்.

அ. முதனிலை உண்மைத் துறைகளில் உத்தரசாதனம் உடன்பாடாதல் வேண்டும்.

ம—ப பூருவசாதனம் எ—ம உத்தரசாதனம் எ—ப உத்தரசாதனம் உடன்பாடன்றாயின், எதிர்மறையாகும். உத்தரசாதனம் எதிர்மறையாயின், பூருவசாதனம் உடன்பாடாதல் வேண்டும். பூருவபதம் பயனிலையாகலால் ஈந்திராது. உத்தரசாதனம் எதிர்மறையாகலான் சாத்தியம் எதிர்மறையாகவேண்டும். சாத்தியத்தில் பூர்வபதம் பயனிலை ஈந்திருக்கும். இது பூர்வபதக் கள்ளநடை. உத்தரசாதனம் எதிர்மறையாகில் போலித்துறையாகும். உண்மைத் துறையாகுதற்கு உத்தரசாதனம் எதிர்மறையன்றாதல்வேண்டும். ஆகலின் உத்தரம் சாதனம் உடன்பாடே.

ஆ. முதனிலை உண்மைத் துறைகளில் பூருவசாதனம் பொதுவாதல்வேண்டும். முதனிலையில் உத்தரசாதனம் உடன்பாடு என்பதை பிரமாணமாகக் கோடலால்; உத்தரசாதனத்து பயனிலையாகில் மத்தியபதம் ஈந்திராது அங்ஙனமாயின் மத்தியபதம் பூருவசாதனத்தில் ஈந்திருத்தல் அவசியம். பூருவசாதனத்து எழுவாயாகிய மத்தியபதம் ஈந்திருப்பதற்கு பூருவசாதனம் பொதுத்தாட்டாந்தமாதல்வேண்டும்.

## 15. இரண்டாம் நிலைச் சிறப்பு விதிகள்.

அ. ஒரு சாதனம் எதிர்மறையாகவேண்டும்.

ஆ. சாத்தியம் எதிர்மறையாகும்.

இ. பூர்வசாதனம் பொதுவாகும்.

## 16. மூன்றாம் நிலைச் சிறப்பு விதிகள்.

அ. உத்தரசாதனம் உடன்பாடாதல்வேண்டும்.

ஆ. சாத்தியம் சிறப்பாகும்.

## 17. நிலைகளைப் பற்றிய குறிப்புரை.

முதனிலைத் துறைகள் மூலமாகப் பிரமாணங்களை மொழிகிறோம். முதனிலையில் மாத்திரம் உடன்பாட்டுத் தாட்டாந்தம் ஒன்றை நிரூபித்துக் காட்டலாம். முதனிலையில் மாத்திரம் மேற்கோள் ஒன்றை பூருவசாதனமாக எடுத்துக் காட்டி அம் மேற்கோளுடன் உத்தரசாதனமாகும் ஓர் ஏதுவை உற்று நோக்கி வழியளவையின் சிறப்பியல்பைக் காட்டலாம். யூகிக்கும்போது ஒவ்வொரு காட்சியையும் முதனிலைத் துறையாகக் கருதுகிறோம்.

இந்த அடையாளம் இன்ன இன்ன பண்புடையது.
இன்னஇன்ன பண்புடையது மக்களது அடி.
ஆகையால் இந்த அடையாளம் மக்களது அடி

ஆராய்ச்சி நூல்களின் பிரமாணங்களை எல்லாம் முதனிலையிலேயே நிரூபித்துக் காட்டுகிறோம். இயற்கை விதிகள் எல்லாம் முதனிலை முதல்துறையே. (உஉஉ) யாதி யாது பூதப்பொருள் அது அது அனல்சாரணமாவிரியும். பளிங்கு ஒரு பூதப்பொருள். பளிங்கு விரியுந்தன்மையுடையது. திறனாராயும் நூல்களின் பிரமாணங்களும் முதனிலைத் துறையாலே நிரூபிக்கப்படும்.

மோகங்கள் தெரிந்து தெளிந்து நிச்சயிக்கப்பட்ட செயல்களல்ல. அறங்கள் தெரிந்து தெளிந்து நிச்சயிக்கப்பட்டசெயல்கள். அறங்கள் மோகங்களல்ல. (யவனமஞ்சரி) வைத்தியநூல்

பொருணூல் முதலியவற்றின் பிரமாணங்களும் முதனிலையால் இலகுவாய் மொழியலாம்.

ஒருபொருளின் சொரூபத்தை அறிதற்கு முதல் அத்தியாவசியமாகும்; ஏனைய நிலைத்துறைகளால் சொரூபத்தை அறியவியலாது. இரண்டாம் மூன்றும் நிலைகள் உடன்பாட்டுப்பொது தாட்டாந்தம் ஒன்றை நிரூபித்துக் காட்டா.

இரண்டாம் நிலைத்துறைகள் எதிர்மறைக் காட்சிகளையே நிலை நிறுத்தும்; மூன்றும் நிலைத்துறைகள் சிறப்புத் தாட்டாங்களை நிலை நாட்டுதற்குப் பயன்படுமாதலின் பயிர்நூல் விலங்கியல் நூல்களில் வகுத்தல் முறைகளில் உபயோகமாகும் மூன்றும் நிலையில் மத்தியபதம் இருசாதனத்திலும் ஈந்திருந்து சாத்தியமொன்றை மொழியுமாயின் அத்துறை வன்மைத்துறையெனப்படும். உஉஊ என்னுமதத் துறையில் ஊசாத்தியத்தைப் பெறுதற்கு உத்தரசாதம் சிறப்பாகவிருந்தால் போதும்.

உ திமிங்கிலம் கருப்பையிற் றோன்றும் விலங்கு

உ திமிங்கிலம் நீர்ப்பிராணி

சில நீர்ப்பிராணி கருப்பையிற்றோன்றும் பிராணி

மத்தியபதம் இருசாதனத்தும் ஈந்திருத்தல் அருமை

சிறப்புப் பதங்களை உடைய தனித்தாட்டாந்தங்களைத் துறைகளில் உபயோகிக்கும்போது முன்றும்நிலை சிறப்புடையதாகும். கீத்தே (Goethe) ஒரு சர்மானிய தேசத்துப் புலவன். கீத்தே ஒரு இயற்கை ஆராய்ச்சி வல்லுநன். சிலபுலவா ஆராய்ச்சி வல்லுநர். சோடியம் நீரில் மிதக்கும். சோடியம் ஒருலோகம் சில லோகம் நீரில் மிதக்கும். மூன்றும் நிலையில் இயற்கையாராய்ச்சித் துணிபுகளை உணர்த்தலாம். நான்காம் நிலை முறை பிறழ்ந்த நிலை. எல்லா முல்லைகளும் பயிர்கள். எல்லாப் பயிர்களும் வாயுவை உண்பன. வாயுவை உண்பன முல்லைகள்.

(தொடரும்.)

# பிரம்பில் என்னும் வைப்புத் தலம்.

திரு. வை. சுந்தரேச வாண்டையார், அவர்கள் ஆசிரியர், திருவையாறு.

சோழநாட்டுத் தேவார வைப்புத் தலங்களுள் பிரம்பில் என்பதும் ஒன்றும். திருநாவுக்கரசர் அருளிய க்ஷேத்திரத் திருத்தாண்டகம் ஆறும் திருப்பாட்டில்* இத்தலம் வைத்துப் பாடப்பெற்றுள்ளது. இஃது யாண்டுள்ளதென ஆராய்வாம்.

இப்பெயருள்ள ஊர்கள் தஞ்சாவூர் சில்லா தஞ்சாவூர் தாலூகாவில் இரண்டுள்ளன. ஒன்று குடமுருட்டி ஆற்றின் தென்கரையிலுள்ள திருவாலம்பொழிற்குத் தென்மேற்கே இரண்டு கல் தூரத்திலுள்ள வேளாண் பிரம்பூரும், மற்றொன்று வேளாண் பிரம்பூருக்குத் தெற்கே மூன்று கல் தூரத்தில் வெண்ணாற்றின் தென்கரையிலுள்ள கள்ளப் பிரம்பூருமாகும்.

வேளாண் பிரம்பூர் சிவன் கோயிலில் கர்ப்ப இல்லத்தின் (விமானத்தின்) தென்புறத்தில் ஒரே ஒரு கல்வெட்டிருக்கின்றது. அது சோழ மன்னனாகிய இரண்டாவது அல்லது மூன்றாவது இராசராசனது எனத் தோன்றுகிறது. அதன்கண் "பாண்டிய குலாசனி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்துப் பிரம்பில் உடைய திருவேகம்ப முடையான் கோயில்" என்று குறிக்கப் பெற்றுளது.

*மண்ணிப் படிக்கரை வாழ்கொளி புத்தூர் வக்கரை மந்தாரம் வாரணாசி
வெண்ணி விளத்தொட்டி வேள்விக்குடி விளமர் விராடபுரம் வேட்க ளத்தும்
பெண்ணை யருட்டுறை தண்பெண் ணாகடம் பிரம்பில் பெரும்புலியூர் பெருவே ளூருங்
கண்ணை களர்க்காறை கழிப்பாலையுங் கயிலாச நாதனையே காண லாமே.

இனி, கள்ளப் பிரம்பூர் சிவன் கோயிலில் ஆறு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவற்றுள் இரண்டு மூன்றுங் குலோத்துங்க மன்னவனதும், ஏனையவை அவன் காலத்துக்கு முன்பு வாழ்ந்த முதற்குலோத்துங்கனதும், அவனது பின்னோரனவுமாம்.

இம்மூன்றுங் குலோத்துங்கன் கல்வெட்டு ஒன்றின் மாத்திரம் அவ்வூர்க்கோயில் 'பிரம்பிற் சீகயிலாயம்' என்று குறிக்கப் பெற்றுள்ளது. இக்கல்வெட்டுக்கு முற்பட்டனவாகிய ஏனையவற்றுள் "பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துப் பிர்மதேயம் ஸ்ரீ ராஜசுந்தர சதுர்ப் பேதி மங்கலத்து உடையார் ஸ்ரீகயிலாசமான குலோத்துங்க சோழ ஈஸ்வரமுடையார் கோயில்" என்றே குறிக்கப் பெற்றுள்ளது. எனவே மூன்றுங் குலோத்துங்கன் காலத்துக்கு முன்னர் அவ்வூருக்குப் **பிரம்பில்** என்ற பெயர் எய்திலாமையும், **ஸ்ரீ ராஜசுந்தர சதுர்ப் பேதி மங்கலம்** என்ற பெயரே வழங்கி வந்தமையும் போதரும்.

ஆனல் வேளாண் பிரம்பூர் நம் சோழ மண்டலத்தை கி.பி. 985 முதல் கி. பி. 1012 வரையில் ஆண்ட முதலாம் இராசராச மன்னனது காலத்திலேயே பிரம்பில் என்ற பெயரால் வழங்கி வருதலால் அதுவே, திருநாவுக்கரசர் காலத்தும் அப்பெயரால் வழங்கி வந்த பழைய ஊராக இருக்கலாம் என்றும், அதுவே முற்கூறிய வைப்புத்தலமாமென்றும் தோன்றுகிறது. இவ் வாராய்ச்சிக்குப் பயன்படக்கூடிய இவ்விருவூர்களின் கல்வெட்டுக்களை வேண்டிய அளவு கீழே குறிப்பிடுகின்றேன். இவைகள் இதுகாறும் தென்இந்திய கல்வெட்டுப் புத்தகங்களில் வெளி வாராதனவாம்.

### வேளாண் பிரம்பூர் சிவன்கோயில் கல்வெட்டு.

இடம்—விமானத்தின் தென்புறம்

அரசன்—இரண்டாம் அல்லது மூன்றும் இராசராசன்

காலம்—இராச்சிய ஆண்டின் பதினாறுவது ஆண்டு.

(1) திரிபுவன சக்கரவ (2) ர்த்திகள் (3) சுவஸ்திஸ்ரீ இராஜரா (4) ஜ தேவற்கு யாண்டு யிக (5) ஆவது தனுநாயிற்று ஞாயிற் (6) வ பட்சத்து ஏகாதசியு (7) ம் செவ்வாய்க்கிழமை (8) யும் பெற்ற அவிட்டத்து (9) நாள் அரையன் திருப்பூவ (10) ........ ...............(11)...................பாண்டிய குலாசினீ (12) வளநாட்டு ஆர்காட்டு கூற்றத்(13) துப் **பிரம்பில்** உடைய திரு (14) வேகம்ப முடையான் கோயி (15) ல் ஆதிசண்டேஸ்வர தேவற்கு (16)

நான் இற்றைநாளால் தாங்ம (17) ாகக் கொடுத்த நிலமாவது எ (18) ன் காணியான...............என்று தொடர்கிறது.

### கள்ளப் பிரம்பூர் சிவன் கோயில் கல்வெட்டு.

இடம்—விமானத்தின் மேற்குப்பக்கம்

அரசன்—முதற் குலோத்துங்கன்

காலம்—இராச்சிய ஆண்டில் 49-வது ஆண்டு.

பூமாது விளங்க ஜயமாது விரும்ப நிலமகள் நிலவ...............உலகுடையாளொடு வீற்றிருந்தருளிய கோவிராஜகேசரிபன்மரான உடையார் திரிபுவன சக்கரவர்த்திகள் முதற்குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு நாற்பத்தொன்பதாவது ராஜசுந்தரச் சதுர்ப்பேதி மங்கலத்து ஸ்ரீகயிலநாதமாந ஸ்ரீகுலோத்துங்க சோழீஸ்வரம் உடைய மகாதேவர் திருமடை வளாகத்து இருக்கும்..............என்று தொடர்கிறது.

[விரிவஞ்சி இக்கல்வெட்டிலுள்ள மெய்க்கீர்த்தியின் எஞ்சிய பாகம் நீக்கலாயிற்று.]

இடம்—கோபுரத்தின் தென்புறம்

அரசன்—மூன்றாங் குலோத்துங்கன்

காலம்—இராச்சிய ஆண்டின் இருபத்து மூன்றாவது ஆண்டு.

(1) சுவஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ம (2) துரையும் ஈழமும் பாண்டியன் முடித்தலை (3) யுங் கொண்டருளிய குலோத்துங்க சோழ தேவர்க்கு (4) யாண்டு இருபத்து மூன்றாவது மீனஞாயிற்று அபரபக்ஷத்து (5)...................திங்கட்கிழமையும் பெற்றவாரத்து பாண்டிகுலா (6) சினிவளநாட்டு தஞ்சாவூர் கூற்றத்து பிர்மதேயம் ஸ்ரீராஜசுந்தர சது (7) ர்ப்பேதி மங்கல உடையார் ஸ்ரீ கயிலாசமான குலோத்துங்க சோழ (8) ஈஸ்வரமுடையார் கோயில் ஆதி சண்டேஸ்வர தேவர்க்கு (9) இவ்வூர் விருதராச பயங்கரச்சேரி ஆம்பலூர் ஆண்டான்............யான ஆதிவராகப்பட்டனை..............குடுத்த நிலமாவது.............. என்று தொடர்கிறது.

இடம்—அர்த்தமண்டபத்தின் தென்புறம்

அரசன்—III குலோத்துங்கன்

காலம்—இராச்சிய ஆண்டின் பன்னிரண்டாவது ஆண்டு.

சுவஸ்திஸ்ரீ வெண்ணக்கமுமி ராஜாக்கள் தம்பி...............விளங் கிடக் கவித்தருளி வீரா...............தமிழ்ப் பாண்டியன் முடித் தலை கொண்டவன் தனபதி கொண்ட சோழற்குப் பன்னிரண் டாவதின் சென்னிமிசைத்த...............திஞர்க் கங்கனைத் தரித் தார்க்குப் பிரம்பிற் சிகயிலாயத்து...............என்றுள்ளது.

குறிப்பு:—இது செய்யுள் வடிவமாய் மிகவும் சிதைந்துபோன ஒரு கல் வெட்டு, இதில்தான் இக் கள்ளப் பிரம்பூருக்குப் பிரம்பில் என்ற பெயர் உண்டென்று புலப்படுகிறது.

இடம்—அர்த்தமண்டபத்தின் வடக்குப் பக்கம்

அரசன்—மூன்றும் இராசராசன்

காலம்—இராச்சிய ஆண்டு இருபத்தொன்பதாவது.

(1) சுவஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் இராஜராஜதேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவது பாண்டிய குலாசிநி வளநாட்டு தஞ்சாவூர்க் கூற்றத் (2) து பிர்மதேயம் ராஜசுந்தரச் சதுர்ப் பேதிமங்கலத்து...............என்று தொடர்கிறது.

ஆர்க்காட்டுக் கூற்றத்தில் பிரம்பில் உண்டென்று உணர்த் தும் முதலாம் இராசராச மன்னனது தஞ்சை இராசராசேச் சரத்தில் குறிக்கப்பெற்ற கல்வெட்டு. (South Indian inscription Vol. II Part IV. page 438 line 6.)

பாண்டிய குலாசனி வளநாட்டு ஆர்க்காட்டு கூற்றத்துப் பிரம்பில் இருக்கும் இடையன் [நீ] ங்காநிலை கூனனும் தஞ்சா வூர்ப் புறம்படி ராஜ வித்யாதரப் பெருந்தெருவில் இருக்கும் இடையன் கணிச்சன் திருமலையும் ஆடவல்லானல் நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு.

இக்கல்வெட்டுக்களைப்பற்றிய சில குறிப்புக்கள்

பாண்டிய குலாசனி வளநாடு:—

முதலாம் இராசராச மன்னனது பதினெட்டாவது இராச் சிய ஆண்டில் நம் சோழமண்டலம் ஒன்பது வளநாடுகளாகப்

பிரிக்கப்பட்டிருந்தது. அவைகளுள் பாண்டிய குலாசனி வளநாடு என்பது ஒன்றாகும். இம் முதலாம் இராசராச மன்னன் காலம் முதல், அதிராசராசன் காலம் முடிய இதற்கு இப்பெயரே வழங்கி வந்தது. இவனுக்குப் பின்னர் பட்டம் எய்திய முதலாங் குலோத்துங்கன் இவ்வள நாடுகளின் பெயர்களைமாற்றி, அவைகளுக்குத் தன் இயற்பெயரையும் விருதுப் பெயர்களையும் வைத்துள்ளான். அவ்வாறு வைத்துள்ள போதிலும், இப் பாண்டிய குலாசனி வளநாட்டின் பெயரை மாற்றிவிடவில்லை. மூன்றாங் குலோத்துங்கன் ஆட்சியின் முற்பகுதிவரை இதற்கு இப்பெயரே வழங்கி வந்துளது. பின்னர் இம்மன்னன் தன் ஆட்சியின் பிற்பகுதியில் இவ்வளநாட்டின் பெயரைமாற்றி அதற்குப் பாண்டியகுலபதி வளநாடு என்று பெயர் வைத்துள்ளான்.

**ஆர்க்காட்டுக் கூற்றம்:**—பாண்டிய குலாசனி வளநாடு பல கூற்றங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது. அவைகளுள் ஆர்க்காட்டுக் கூற்றம் என்பது ஒன்றாகும். இதுகாவிரிக்கு வடக்கு, விண்ணாற்றிற்குத் தெற்கு, திருவையாற்றிலிருந்து தஞ்சாவூருக்குப் போகும் பெருவழிக்குமேற்கு, திருக்காட்டுப்பள்ளி, விண்ணமங்கலம் இவைகளுக்குக் கிழக்கு, ஆகிய இந்நாற்பாலெல்லைக்குட்பட்டு ஆர்க்காட்டைத் தலைமையாகக்கொண்ட நிலப்பரப்பாகும். (இவ்வார்க்காடு நிலைபெற்றுள்ள இடம், இதன் தொன்மை இவைகளைப்பற்றி திருப்பூந்துருத்தி சிவன் கோயில் கல்வெட்டுக்கள் என்ற தலைப்பின் கீழ் தமிழ்ப்பொழிலில் யான் எழுதிய கட்டுரையிற் காண்க.) ஆயிரத்தளி, ஒதவேலி (ஒம்பத்துவேலி) பெருமங்கலம், பிரம்பில், புதுக்குடி, சங்கிரலேகை (செந்தலை) பேர்ஆர்க்காடு, பேர்அரசூர், திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, ஆகிய இவ்வூர்கள் இக்கூற்றத்திற்குட்பட்டிருந்தனவென்று முதலாம் இராசராச மன்னனது இராசராசேச்சுரக் கல்வெட்டுக்களால் அறியக்கிடக்கின்றன.

**தஞ்சாவூர்க் கூற்றம்:**— இதுவும் பாண்டிய குலாசனி வள நாட்டின் பல கூற்றங்களில் ஒன்றாம். இஃது ஆர்க்காட்டுக் கூற்

றத்திற்குத் தெற்கு, தஞ்சாவூர், கருந்திட்டைக்குடி, இவைக ளுக்கு மேற்கு, விண்ணமங்கலம், பூதலூர், இவைகளுக்குக் கிழக்கு ஆகிய இந்நிலபரப்பை யுடையதாய், தஞ்சாவூரைத் தலைமையாகக் கொண்டுள்ளதாகும். தஞ்சாவூர், தஞ்சாவூர் பற்று, கருந்திட்டைக்குடி ஆகிய இவ்வூர்கள் மன்னனது இக்கூற்றத்திற்குட்பட்டிருந்தனவாக முதலாம் இராசராச இராசராசேச்சரக் கல்வெட்டுக்களால் அறியலாகும்.

## இந்தியாவும் சீனவும்

T. S. நடராசன், வாணுதுறை, கும்பகோணம்.

[சீனப்பேராசிரியர் டான்-யுன்-ஷன் என்பார் சாந்திநிகேதனத்தில் நிகழ்த்திய ஆங்கிலச் சொற்பொழிவின் மொழிபெயர்ப்பு.]

விரைந்து செல்லும் அம்புபோலக் காலம் கழிந்து செல்லா நிற்கின்றது. இந்தியாவை விட்டு எனது தாய் நாட்டிற்குச் சென்று மூன்று ஆண்டுகளாகின்றன. ஆனல், இடைப்பட்ட இந்த நீண்ட காலத்தில் ஒரு நாளாயினும் இந்தியாவை நினையா திருந்தறியேன்; அதிலும், இந்த அழகிய, எனது அன்பிற் குரிய சாந்தி நிகேதனத்திலுள்ள 'விசுவபாரதி' ஒரு இமைப் பொழுதும் என் உள்ளத்தைவிட்டு நீங்கவில்லை. தன் கூட்டினை விட்டு நீங்கும் ஒரு தேனீயைப் போன்றே யான் சாந்திநிகே தனத்தை நீங்கிச் சென்றேன். யான் சாந்திநிகேதனத்தை எனது பிறந்த ஊரைப்போல நேசிக்கிறேன்; எனது தாய் நாட் டைப்போன்று இந்திய நாட்டைக் காதலிக்கிறேன். இம்முறை யான் எனது பிறந்த ஊரினையும் தாய் நாட்டினையும் நீங்கிச் சாந்திநிகேதனத்திற்கு இரண்டாம் முறையாக வந்ததானது, யான் மூன்று ஆண்டுகட்கு முன்னர் இந்தியாவையும் சாந்தி நிகேதனத்தையும் நீங்கி என் தாய் நாட்டிற்கும் என் பிறந்த ஊருக்கும் திரும்பியது போன்றே இருக்கின்றது. இது யான்

முழுமனதோடு கூறுவதாகும். ஆதலின், இங்கு இருப்பதில் எனக்குள்ள மகிழ்ச்சி உண்மையிலேயே அளவிட்டுரைக்குந் தரத்ததன்று.

இந்தியா, சீனு ஆகிய இருநாடுகளும் இயற்கையிலேயே பிரிக்க முடியாத உடன் பிறப்பு நாடுகளாகும். அவைகளிடையேயுள்ள ஒற்றுமைகளையும் உறவுகளையும் அறிவிப்பன, சிறந்தனவாயும் எண்ணற்றவையாயும் இருக்கின்றன. உலகிலுள்ள எல்லா நாடுகளின் நிலமேற் பரப்பு விவரத்தினையும் (Geography) வரலாற்றினையும் ஆராய்ந்துபார்க்கின், நம் இரு நாடுகளோடு ஒப்பிடக் கூடிய வேறு இருநாடுகளைக் காணல் இயலாது. எந்த விதங்களாலும், எந்த முறைகளாலும் ஆராய்ந்து அறுதியிட்டுப் பார்க்கினும் இவ்வுண்மை அறியலாகும்.

நம் இரு நாடுகளும், அழகும் பெருமையும் வாய்ந்த ஆசியாவில் தென்மேற்கில் இந்தியாவும் வடகிழக்கில் சீனுவுமாக இருவேறு புறங்களில் விரிந்து அமைந்துள்ளவாயினும் ஒரு வண்டியின் இரு உருளைகளைப் போலவும், ஒரு பறவையின் இரண்டு இறக்கைகளைப் போலவும், ஒரு மனிதனது இருகைகள், இருகால்கள், இருகாதுகள் அல்லது இருகண்களைப் போலவும் இணைக்கப்பட்டுள்ளன. மிக வுயர்ந்ததும், பெருமையும் பேரழகும் பெருஞ்சிறப்பும் வாய்ந்ததுமான இமயமலை அவைகளுடைய முதுகெலும்பு, தோள்கள் அல்லது கழுத்துப் போன்றிருக்கிறது. அவைகளுடைய எல்லைகள் அறுதியிடப்பட்டுள்ள போதிலும் இயற்கையமைப்பு ஒரே விதமாயுள்ளது.

ஒரு சீனப் பழமொழி 'எண்ணற்ற மக்களுள்ள பரந்த நாட்டை'ப் பற்றிக் கூறுகின்றது. இந்தியாவும் சீனுவும் உண்மையிலேயே இவ்விருபேறுகளையும் பெற்றுள்ளன. அன்றியும், நம் இரு நாடுகளுடைய மண் மிகுந்த வளமுள்ளதாயும், வனப்பு வாய்ந்ததாயும், மிகுந்த விளைவுள்ளதாயும் இருக்கின்றது; மக்கள் வாய்மையும் நேர்மையுமுடையோர்களாயும் சிக்கனமும் உழைப்புமுடையவர்களாயும் இருக்கின்றனர். நமது விளைபொருள்களும் மற்றைய பொருள்களும் நமக்குப்போதியனவாயிருப்பதோடு மற்ற நாடுகளுக்கும் பயன்படுகின்றன.

நமது நாகரிகங்கள் நம்மால் நினைத்தற்கரிய மிகப் பழைய காலத்தில், அதாவது, பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தொடங்கின. சீனர்களது மிகப் பழைய வரலாற்றுக் குறிப்புக்களில், ஹுவாங்-டி என்னும் மன்னரால் கி. மு. 2697 ஆம் ஆண்டில் சீன ஐக்கியப் பேரரசு நிறுவப்பட்டதென்று கூறப்பட்டுள்ளது. ஆகவே, கி. பி. 1934 ஆகிய இவ்வாண்டு சீனர்களது பழைய வரலாற்றுக் கணக்கின்படி 4631-ஆம் ஆண்டாகும். வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலமானது மிக நீண்டதாயும் நிகழ்ச்சிகள் நிறைந்ததாயும் இருந்திருக்கவேண்டும். சில பழைய நூற்கள் ஹுவாங்-டி மன்னன் ஆட்சிக்குப் பதினெண்ணாயிரம் ஆண்டுகட்கு முன்னரே சீன நாகரிகம் தொடங்கியதென்று கூறுகின்றன; வேறு சில நூற்கள் அம்மன்னனுக்கு ஐம்பதினுயிரம் ஆண்டுகட்கு முன்னரே சீன நாகரிகத் தோற்றம் உண்டாயிற்றென்று மொழிகின்றன. இக்குறிப்புக்கள் உண்மையானவையாயிருந்தாலும் இருக்கலாம்; குறிக்கப்பட்டுள்ள செய்திகள் நம்பக்கூடியனவாயில்லை. ஹுவாங்டி மன்னனது ஆட்சிக்குப் பின்னர்தான் வெவ்வேறு காலங்களில் நடைபெற்ற முறைகளும், நிகழ்ச்சிகளும் சிறிதும் ஐயமின்றி ஆராய்ந்து அறியக்கூடியனவாயுள்ளன. இந்தியாவின் மிகப் பழைய செய்திகளை யறிவிக்கக் கூடிய கருவிகள் மிகக் குறைந்திருந்தபோதிலும் புத்த சமயத்தைப்பற்றிய சீன நூற்களிலுள்ள செய்திகளால் பழைய இந்தியா பெரும்பாலும் பழைய சீனுவையே ஒத்திருந்ததென்பது அறியப்படுகிறது. இக்காலத்து அறிஞர்கள் தங்கள் ஆராய்ச்சியின் பயனுக வேதகாலம் கி. மு. 3000 க்கும் கி. மு. 2000 க்கும் இடைப்பட்டதாகுமென்று நிறுவியுள்ளனர்; ஆதலின் இந்திய நாகரிகத்தின் பழமையைப்பற்றி யாரும் ஐயுறமுடியாது. நாகரிகத்தின் முதலாவதான சிறப்பு தமது மொழிக்கு எழுத்துக்களைக் கண்டுபிடித்தலே யாதலின் ஒரு நாட்டின் நாகரிக வரலாற்றை அறிவதற்கு அதன்மொழி முதன் முதலாக எழுதப்பட்ட காலத்தைக் கண்டுபிடிப்பது இன்றியமையாதது. சீனமொழி ஹுவாங்-டியின் காலத்திலேயே நல்ல எழுத்து முறையை யுடையதாயிருந்தமையின், அதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே எழுதத்

தொடங்கப் பெற்றுப் பல சீர்திருத்தங்களோடு வளர்ச்சியுற்றிருக்கவேண்டும். இதனை அறிவுறுத்தும் சீன இலக்கியங்கள் மிகப்பலவாதலின் எல்லாமேற்கோள்களையும் இங்கே கூறுதல் இயலாததாகும். டாங் மரபினரின் ஆட்சிக்காலத்திருந்த பேர் பெற்ற துறவியாகிய டாவோஷி என்பார் இயற்றிய 'புத்த உலகத்தின் முத்துக்கள்' என்றநூலில் இந்தியமொழிகளின் எழுத்து முறையைப்பற்றிய குறுப்பு காணப்படுகிறது. "பழைய காலங்களில் எழுதும் முறையைக் கண்டுபிடித்தவர் மூவர் இருந்தனர்; முதலாமவராகிய பிரம்மாவின் முறை இடது பக்கத்திலிருந்து வலது பக்கத்திற்கு எழுதுவதாகும்; இரண்டாமவராகிய காருவின் முறை வலது பக்கத்திலிருந்து இடது பக்கத்திற்கு எழுதுவதாகும்; மூன்றுமவராகிய ட்ஸாங்-சியாவின் முறை மேலிருந்து கீழே எழுதுவதாகும்." இங்கே குறித்துள்ள பிரம்மா வடமொழி எழுத்துகளைக் கண்டுபிடித்தவர்; கரோஸ்தி எழுத்துக்களைக் கண்டு பிடித்தவர் காரு ஆவார்; சீன வார்த்தைகளை உண்டு பண்ணியவராகிய ட்ஸாங்-சியா என்பார் ஹுவாங்-டி மன்னனது அதிகாரிகளுள் ஒருவர். உண்மையில், ட்ஸாங்-சியா சீன எழுத்துக்களைக் கண்டுபிடித்தவரல்லர்; சீன மொழியில் அப்போது எழுதப்பட்டிருந்தவைகளை ஒன்று சேர்த்து முறைப் படுத்தியதே அவர் செய்ததாகும். இன்னும் மேற்கூறிய நூலில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. 'பிரமா மூத்தவர்; காரு அடுத்தவர்; இவ்விருவரும் டியேஞ்சு (இந்தியா) வில் இருந்தனர்; இளையவராகிய ட்ஸாங்-சியா நடுவிராச்சியத்தில் (சீன) இருந்து வந்தனர்.'

ஆகவே, இந்திய மொழியின் எழுத்து முறை அசோகருக்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்பாதல், சீன எழுத்து வழக்கு முறையை வரையறுத்த ட்ஸாங்-சியாவின் காலத்திலாதல் ஏற்பட்டிருக்க வேண்டுமென்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்தியாவிலுள்ள பழைய வரலாற்று ஆராய்ச்சியாளர் அண்மையில் பல அரிய உண்மைகளைக் கண்டறிந்துள்ளனராதலின், யான் இதுபோது கூறியன பல புதிய சான்றுகளால் வலியுறுத்தப்பெறும் என்று நம்புகிறேன். எனவே இந்திய சீன நாகரிகங்கள்

தொடங்கிய காலங்களும் அக்கால நிகழ்ச்சிகளும் தம்முட்பெரிதும் ஒற்றுமைப்படுவது விளக்கமாகும்.

உலகத்தில் மிகப்பழைய நாகரிகம் வாய்ந்த நாடுகள் நான்காகும்; அவை ஈஜிப்ட், பாபிலோனியா, இந்தியா, சீன என்பன. ஆனல் ஈஜிப்டும் பாபிலோனியாவும் இதுபோது வரலாற்றில் குறிப்பிடப்படுவதான தன்மையை மாத்திரம் பெற்றுள்ளன. அவற்றின் பழங்குடிகள் தாழ்ந்த நிலையை எய்தியுள்ளதோடு அவற்றின் நாகரிகங்களும் காலமென்னும் இருளில் மறைந்து போயின; அவற்றின் நிலங்களும் தொன்மை ஆராய்ச்சியாளர் தம்மைத்தோண்டி ஆராய்வதற்கும் அறிஞர்களும் கவிஞர்களும் தம்மைப்பாடி வருந்துவதற்கும் நிலைக்களங்களாக இருக்கின்றன. பிற்காலத்தே தோன்றிய பலநாடுகள் தோன்றுவதும் மறைவதும் உயர்வதும் தாழ்வதுமாக இருக்கின்றன. இந்தியாவும் சீனவுமாகிய நம் இருநாடுகள் தாம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றி அந்நாள் தொடங்கி இந்நாள் வரை அழியாச் சிறப்போடும் பெருமையோடும் விளங்கி வருகின்றன. நமது நாடுகள், பிறநாட்டுப் படையெழுச்சிகளால் அல்லற்பட்டுச் சிறுமையுற்று அரசுரிமையை இழந்தகாலத்தும் நமது ஒப்பற்ற நீண்டகால அனுபவ அறிவு, படிப்பினைகள், முறைகள், வழக்கவொழுக்கங்களாகிய இவற்றல் கொடியவர்களும் நாகரிகமற்றவர்களுமான படையெடுப்போர்களை நம்மையொத்தவர்களாகச் செய்து கல்வியையும் நாகரிகத்தையும்புகட்டி வந்துள்ளமையால் பல்வேறு நாடுகள் அழிந்த பின்னும் எந்நாளும் அழியாது நிலைபெற்று விளங்குவனவாயுள்ளன. உலக வரலாறுகளில் இந்தியாவும் சீனவுமே இத்தகைய தனித்த இயல்பை அடைந்துள்ளன.

இனி, சீனநாட்டிற்குரிய அடிப்படையான குணங்கள் ஒப்புரவும் பணிவுடைமையும் ஆகும்; அவை 'நிறைந்த சீலம்' என்று பொருள்படும் (Jen) என்னும் வார்த்தையினல் குறிக்கப்பெறும். இந்திய நாட்டிற்குரிய இன்றியமையாத பண்புகள் இரக்கமும் அமைதியுமாம்; அவை 'அஹிம்சை' என்னும் மொழியால் குறிக்கப்படும். இந்த நாற்குணங்களும் வெவ்வேறு

தன்மையவாயினும் பொதுவாக நோக்கின் அடிப்படையான ஒரே கொள்கையில் அடங்குவனவாகும். சீனர்களது வாழ்க்கை 'நன்னெறி'யைப் பற்றுக்கோடாகக் கொண்டுள்ளது; ஆதலின் உலகத்தைப்பற்றிய அவர்களது கொள்கை அமைதியாகும். இந்தியர் தமது வாழ்க்கையில் ஐம்புல ஒடுக்கத்தை வற்புறுத்துகின்றார்கள்; உலகத்தைப்பற்றிய அவர்களது கொள்கை சமத்துவமாகும். சீனர்கள் தம் முன்னோரை வழிபாடு செய்பவர்களாயும் உறவினர்களிடத்தில் பேரன்புடையோராயுமிருத்தலின் வழிவழியாகப் பெரிய குடும்பமாக வசிக்கும் முறை எப்போதும் நிலைபெற்றிருக்கிறது. இந்தியரும் இத்தன்மையரேயாவர். இந்தியர்கள் தாம் பிறந்த நாட்டில் வசிப்பதையே விரும்புவர்களாயும் தம் ஆசிரியர்களிடத்தும் முதியோர்களிடத்தும் மரியாதையுடையவர்களாயும் இருக்கின்றனர். சீனர்களும் இத்தகைய ஒழுக்கமுடையவரே. பொது வாழ்க்கையில் சீனர்கள் நியாயத்தையும் நடுவுநிலைமையையும் வற்புறுத்துகின்றனர். இந்தியர்களும் இவ்வண்ணமே ஒழுகுகின்றார்கள். இந்தியர்கள், நிறை, கற்பு, அடக்கமுடைமை ஆகிய குணங்களை மிகப் போற்றுகின்றார்கள். சீனர்களும் அத்தகையோரே. இம்மாதிரியான ஒழுக்க முறைகளிலேயன்றிப் பல்வேறு காலங்களிலிருந்த நமது சான்றோர்களது அறவுரைகளும் ஒரேவிதமானவைகளாக இருக்கின்றன. கான்பூஸியஸ் என்பார் ஐந்து அறவுரைகளை விதித்தனர். அவைகள் முறையே உபகாரம், நடுவுநிலைமை, நியாயம், அறிவு, உண்மையுடைமை என்பவற்றை உரைக்கின்றன. வர்த்தமானஜிநரும் புத்தர்பெருமானும் 'பஞ்சசீலாநி' எனப்படும் துறவிகளுக்குரிய ஐந்து அறவுரைகளை மக்களுக்கு அறிவுறுத்தினர். ஜினருடைய விதிகள் முறையே உண்மையுரைத்தல், தூய எளியவாழ்க்கை, கொல்லாமை, கள்ளாமை, தூய ஒழுக்கம் என்பனவாம். புத்தருடைய அறவுரைகள் முறையே கொல்லாமை, கள்ளாமை, பிறர்மனைவிழையாமை, பொய்யாமை, கள்ளுண்ணமை ஆகிய ஐந்துமாம். இவையன்றி, சீனர்கள் பொதுவாக அறிவுடைமை, ஈகை, அஞ்சாமை ஆகிய இம்மூன்றையும் உலகத்திற்குப் பொதுவான உயர்ந்த ஒழுக்கங்களாக மதிக்கிறார்கள்; இந்தியர்கள், துறவு, யோகம், ஞானம்

(சீலம், சமாதி, பிரக்ஞை) ஆகியவைகளை மனித வாழ்க்கையின் மணிவிளக்குகளென்று கருதுகின்றனர். இவ்வாருகிய ஒழுக்க முறைகள் மிகவிரிவாகக் கிடக்கின்றமையின் எல்லாவற்றையும் கூறுதல் எளிதன்று.

நமது நாடுகளின் வாழ்க்கைமுறைகளிலுள்ள ஒற்றுமை இவ்வாருகும். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே நம் இருநாடுகளின் நாகரிகங்களும் கலைகளும் ஒரு நாட்டிலிருந்து இன்னெரு நாட்டிற்குள் புகுந்து கலக்கத் தொடங்கின. புத்தரது வரலாற்றைக் கூறும் 'புத்தசரிதம்' என்னும் நூலில், புத்தர் ஒருகால் விசுவாமித்ர ஆசாரியர் என்பவரிடத்தில் பல நூல்களைக் கற்றனரென்றும் அவற்றுள் சீனவைப்பற்றிய நூலும் ஒன்று என்றும் கூறப்பட்டுள்ளன. 'இரத்தின கூதம்' என்னும் புத்த சமயநூலில் 'வு', 'ஷு', 'சின்' என்பனபோன்ற சீனச் சிற்றரசுகளின் பெயர்கள் கேட்கப்படுகின்றன. சீன நூற்களிலே காணப்படும் இத்தகைய குறிப்புக்கள் மிகப்பலவாகும். இப்போது வலிமையெய்தியுள்ள நாடுகளில் பல, நாகரிகமே இன்னதென்று அறியாத காலத்தும், அவைகளிலிருந்த பழங்குடிகள் பண்படுத்தப்பெருத நிலத்தில் விலங்குகளைப்போன்று வாழ்ந்த காலத்தும், நம் இருநாடுகளாகிய இந்தியாவும் சீனவும் சிறந்த நாகரிகங்களையும் மேன்மைகளையும் எய்தியனவாய், இக்காலத்து அமெரிக்க ஐரோப்பிய வல்லரசுகள் உண்மையான வாழ்க்கை முறையில் அடைந்துள்ளனவற்றைவிட உயர்ந்த செல்வச் சிறப்பையும் மேலான வாழ்க்கையையும் பெற்றிருந்தன. இக்காலத்து மேனட்டு நாகரிகத்திற்கு அடிப்படையாயுள்ளனவும், மேனட்டார் பெருமை கொள்வதற்கும் மற்றையோர் அவர்பால் மதிப்பும் அழுக்காறும் கொள்வதற்கும் கருவியாயுள்ளனவும் அறிவுநூற்களே (Sciences) யாகும். இந்தியாவும் சீனவும் மிகப் பழைய காலத்திலேயே இந்த அறிவுநூற்கள் சிலவற்றின் பொதுவியல்புகளை உணர்ந்திருந்தன. சீனமொழியில் 'வூ-மின்' என்று சொல்லப்படும் 'பஞ்சவித்தை'களை மிகப்பழையகாலத்திலேயே இந்தியர் அறிந்

திருந்தனர். 'பஞ்சவித்தை'களாவன, சப்தவித்தை (ஒலி இலக்கணம்), சில்பகர்மஸ்தானவித்தை (சிற்பநூல்), சிகிச்சைவித்தை (மருத்துவநூல்), ஹேதுவித்தை (அளவுநூல்), அத்யாத்துமவித்தை (ஆன்மநூல்) என்பனவாம். சீனவில் அப்போது (Lu-yi) என்று கூறப்படும் ஆறுகலைகள் இருந்தன. அவை, அறநூல், இசைநூல், வில்வித்தை, சாரத்தியம், எழுதுதல், கணக்கு என்பன. இவைகளேயன்றி (Lu-shu) என்று சொல்லப்படும் ஆறுவகை எழுதும் முறைகளும், (Lu-ching) எனப்படும் ஆறுவகைக் காவியங்களும், மருத்துவ ஆராய்ச்சிகளும், இரணவைத்தியம், வானநூல், சோதிடம், மட்கலவேலை, சிற்பம் முதலியனவும் பயிலப்பட்டுவந்தன. குருதிப்பெருக்கையும் படுகொலையையும் விளைவிப்பனவாகிய நீராவிப்பொறிகள், புகை வண்டிகள், வானவூர்திகள், போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிக் கலங்கள், துப்பாக்கிகள், வெடிகுண்டுகள், கவசமிட்ட பீரங்கி வண்டிகள் (Tanks), நச்சுக் காற்றுக்கள் முதலிய மேனாட்டுப் பொருள்களே நம் இருநாடுகளாகிய இந்தியாவும் சீனவும் உண்மையில் பெற்றிருந்தறியாதனவாம்.

(தொடரும்)

## வல்வடுகு நான்கு

திரு. K. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் B. A., B. L.,

(முற்றொடர்ச்சி துணர் 11. மலர் 4. பக்கம் 150)

### III

**அச்சுதப்ப நாயக்கர்.** அச்சுதப்ப நாயக்கர் தன் தகப்பனார் செவப்ப நாயக்கரிருந்த காலத்தே அவரால் நாட்டினை ஆள உரிமை பெற்றார். இவர் பல உதார குணங்களையுடையவர். இவர் ஸ்ரீரெங்கநாதருக்கு இரத்தின பீடம், இரத்தினங்களால் செய்யப்பட்ட பதைக்கம், கிரீடம், சதங்கை முதலியன அளித்தார். மற்றும் ஸ்ரீரெங்கத்தில் முக்கிய வீதிகளைப் புதுப்பித்

தும், சில வீதிகளை ஆக்கியும் ஆங்கு மறையிலே பாண்டித்தியம் பெற்ற அந்தணர்களைக் குடியேறவும் செய்தனர். இவர் வைணவ மதத்தில் அதிகப் பற்றுடையவராயிருந்தாலும் சைவ மதத்தில் வெறுப்புற்றிலர். இவர் கும்பகோணம், திருவிடைமருதூர், மாயவரம், திருவையாறு முதலிய இடங்களில் புஷ்ய மண்டபங்கள் ஏற்படுத்தினர்: பல தீர்த்தக் குளங்கள்தொட்டும் படிகள் கட்டியும் புதுப்பித்தார்: மற்றும் அளவற்ற திருப்பணிகளும் இத்திருக் கோயில்களுக்குச் செய்தருளினர்.

இவர் தம் நாடு வளம்பெற உழவுத்தொழிலைப் பெருக்கினர். உழவினிற்காகவே பல வாய்க்கால்களையும் ஏரிகளையும் வெட்டினர். இவர் காவிரியினது கல்லணையைப் புதுப்பித்தார். கி. பி. முதல் நூற்றாண்டில் கரிகாலன் I காவிரிக்குக் கல்லணை கட்டினன். பின்னர் 1060-1070 வரையிலும் ஆண்ட (மூன்றாவது கரிகாலன்) இராஜகேசரி வர்மன் என்ற வீரராஜேந்திரன் காவிரிக்கு ஓர் கல்லணை கட்டி முடித்தனன்.

'சொல்லார் பணியுஞ் செம்பியர்கோன்
செழுங் காவிரியின் சிறந்தகரை
கல்லாணை கட்டுவதற்கே வக்கருமமுடித்த
சோழியர்கள்
பல்லோர் மேழிநெடுங் கொடியைப்
பாயும் புலியினேடும் பதித்த
வல்லாண்மையினர் குடிவாழ்வ வளஞ்சேர்
சோழமண்டலமே.'

'தொக்கசக னிற்றெளா யிரத்துத்
தொண்ணூற்றின்
மிக்க கரிகாய் வயவேந்தன்—பக்கம்
அலைக்கும் புனற்பொன்னி யாற்றணையை
யிட்டான்
மலைக்கும் கொடைக் கரத்தான் வந்து'

இவரால் கட்டப்பட்ட கல்லணையை அச்சுதப்பநாயக்கர் பழுது பார்த்து வந்தனர்.

அச்சுதப்ப நாயக்கரது அமைச்சர் கோவிந்த தீக்ஷிதர். இவர் கல்வி கேள்விகளில் அதிநிபுணர். இவர் 'ஹரிவம்ச சரித்திரம்,' 'சங்கீத சுதாநிதி' முதலிய நூற்களை இயற்றியிருக்கின்றனர். இவர் கி. பி. 1605ல் வடமொழியிலிருந்து திருவையாற்றுப் புராணத்தை தமிழ்மொழியில் பெயர்த்தெழுதியதாக தெரிகிறது.

'மலிபுனல் சூழ்சோணாடு தஞ்சையிற்
காத்திடுமரசர் மதியமைச்ச
னொலிமறைதேர் கோவிந்த தீட்சிதராயன்
திருவாக் குடைமையாலே
கலியுகத்துச் சகனாண்டு மூவைஞ்ஞூற்றிரு
பதின்மேற் காணுமேழாய்ப்
பொலிவருடத்தை யாற்றுப்புராண
வடமொழி தமிழாற் புகலலுற்றேன்.'

அச்சுதப்ப நாயக்கரது காலத்தில் சில முகம்மதியப் படைகள் கடல் மார்க்கமாய் நாகைப்பட்டினத்தில் தங்கி ஆங்கு ஓர் படையெழுச்சி செய்ததாக எக்ய நாராயணர் இயற்றிய ஸாஹித்ய ரத்னாகரம் கூறுகின்றது. அச்சுதப்ப நாயக்கர் இவர்களைக் கடலில் புகும்படி முறியடித்தார்கள். இவர் தம் நாட்டினிலே விளைந்த கலகத்தை வேரோடு களைந்து தஞ்சையை நன்னிலைமை யடையும்படி முயற்சி செய்தார். இவர் கர்னாடகத்து இளஅரசருக்கும் படைத்துணை உதவி செய்து அவரை கர்னாடக அரசனாக நியமிக்க விரும்பினர். கர்னாடகத்தை யாண்ட வேங்கடதேவர் கி. பி. 1614ல் விண்ணுலகெய்திடவே கர்னாடக முழுவதும் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தது. வேங்கட தேவருக்கு புத்திரப்பேறில்லாமையால் அவருக்குப் பின்னர் பட்டம் சூட்டிக் கொள்ள உரிமையாளர் யாவர் என்ற கேள்வியே கலகம் விளைவித்தது. வேங்கடதேவரது மனையார் தன் தகப்பனுடன் சேர்ந்த தன்னினத்தான் ஒருவன் கர்னாடகத்தை ஆள வேண்டுமென்ற எண்ணங் கொண்டாள். இவருடைய கொள்கைக்கு குடிகள் இணங்காது வேங்கடதேவரது தமையன் குமரனே பட்டத்திற்குரியவனென்று எண்ண முடையவ

ராய் அவனுக்குப் பட்டம் சூட்டினர்கள். வேங்கடதேவரது மாமனாராகிய சக்கமன்னன் ஓர் நாள் நள்ளிரவில் கொலையாளிகளின் துணை கொண்டு அரண்மனையின் கண் புகுந்து ஆங்கு புதிதாகப் பட்டம் சூட்டப் பெற்ற மன்னனையும், அவனைச் சார்ந்த உற்றாரையும் நட்டாரையுங் கொன்றனன். இப்படி கொலையினின்றும் இறந்துபட்ட அரசரது சிறுபிராயமுள்ள குமாரன் ஒருவன் தப்பித்துக் கொண்டான். இறந்த கர்னுடக வம்சத்தரசனுக்குப் போர்களத்தில் துணைநலமாயிருந்த எச்சம நாயக்கர் என்றூர் இச் சிறுரை யாவருக்கும் தெரியாவண்ணம் வளர்த்தெடுத்து பின்னர் சக்கமன்னனேடு போர் புரிவானெண்ணி அச்சுதப்ப நாயக்கரது உதவியை நாடினன். அச்சுதப்ப நாயக்கர் கர்னுடகத்து அரசகுமாரனைத் தன் ஆதரணையின் கீழ்வைத்து பெரிதும் போற்றி சக்க மன்னனுடன் போர் புரிந்து அவனையும் முறியடித்தான். தோல்வியுற்ற சக்கமன்னன் பின்னர் தம் துணைவலியைப் பலப்படுத்திக்கொள்ளப் பாண்டிய நாட்டரசனேடு சேர்ந்து கொண்டான். இத்தகைய சமயத்தே அச்சுதப்ப நாயக்கர் விண்ணுலகு போந்தனர்.

## IV

இரகுநாத நாயக்கர். இவர் நற்குணங்களால் பெரிதும் சிறப்புற்று குடிகளின் நன்மதிப்பினைப் பெற்றவர். இவர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி கல்வித் துறையை மேம்படுத்த முயன்றூர். தெலுங்குமொழியினை முன்னேற்றத்திற்குக்கொண்டுவர ஆவலுற்றவராய் இவர் பல மேன்மை வாய்ந்த புலவர்களை தனது இருப்பிடத்திற்கழைத்து அவர்களது புலமையைப் பெரிதும் வியந்து பரிசு அளிப்பாராயினர். இவர் மகாபாரத சங்கிரகம், இராமாயண சங்கிரகம், பாரிஜாதகரணம், அச்சுதாப்பியுதம், நளாப்பியுதம் முதலிய கிரந்தங்களை இயற்றியிருக்கின்றனர். இவர் வைணவ மதப்பற்றுடையவரானதால் மதாசாரியர்களை அழைத்து பல்வேறு மதங்களின் உண்மைப் பொருளினை ஆய்ந்து சாஸ்திர ஆராய்ச்சியும், தத்துவ ஆராய்ச்சியும் செய்து வந்தனர். இவர் கும்பகோணம், விஜயராகவபுரம்

முதலிய இடங்களில் இராமசாமி கோயில் கட்டி வைத்ததாகத் தெரிகிறது.

சக்கமன்னன் பாண்டிய மன்னனது துணையைப் பெற்றனன் என முன்னர்க் கூறினோம். இரகுநாத நாயக்கருடன் பாண்டிய மன்னனும் போர்புரியத் தக்க சமயமும் காரணமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். தக்க காரணம் பாண்டிய மன்னனுக்குப் புலப்படாமையால், பாண்டிய மன்னன் காவிரியாற்றங்கரைக்குச்சென்று ஆங்குள்ள பழுதுபார்த்துச்சீர் திருத்தப்பட்ட கல்லணையை உடைத்தனன். இரகுநாத நாயக்கர் நாட்டின் நலத்தினைக் கருதிப்பாதுகாத்த கல்லணை பாண்டியனால் அழிபட்டு போயினமையைக் கேட்டு மனம் பொறாது சினந்து பாண்டிய மன்னனுடன் போரிடவே, சக்க மன்னன் சீர்குலைந்த பாண்டிய சேனையுடன் புறங்காட்டத் தலைப்பட்டான். இரகுநாத நாயக்கர், கர்னுடக வம்சத்திலுள்ள முன்னர் கூறிய சிறு பிராயமுள்ள அரச குமாரனை கர்னுடக அரசனாக்கினர்.

## V

**விஜய ராகவ நாயக்கர்.** இரகுநாத நாயக்கர் காலஞ்சென்ற பின்னர் அவரது குமாரரான விஜயராகவ நாயக்கர் தஞ்சையை ஆண்டார். இவர் தஞ்சையை பலகோட்டைகள் கட்டி பலப்படுத்தி இராஜ்ஜிய முன்னேற்றத்தில் தன் முழுக் கருத்தையும் செலுத்துவாராயினர். தஞ்சையில் இவர் உழவின் நலத்தையும் வாணிகச் சிறப்பினையும் பெருக்கினர். மன்னுயிர்களைத் தன்னுயிர்போன்று பாதுகாத்தார். அரசியல் நீதி முறைமைகளை நன்குணர்ந்தவர். இவர்காலத்தில் நின்றுலவிய மதங்கள்பாவையும் காத்து அவைகளை வளம்பெறச் செய்தார். ஆனால் இவர் போர்த்திறமை நன்குணர்ந்த புயவன்மையில்லார். ஆதலால் இவரது காலத்தோடு தஞ்சை நாயக்கரது அரசு ஒழிவுற்றது.

விஜயநகர இராஜ்ஜியம் தலைக்கோட்டைப் போரில் சீர்குலைந்து கலவரப்பட்டு நிற்க, முகலாயர்கள் அந்த இராஜ்ஜியம் தலையெடுக்கவொண்ணுதபடி பலவிதமான இடுக்கண் புரிந்தனரென்பது நாம் முன்னர் அறிந்ததே. விஜயராகவ நாயக்கர்

தஞ்சையில் அரசு செலுத்தினபொழுது மதுரையிலாண்ட நாயக்கர், முத்து அளகாத்ரி நாயக்கராகும் (1659—1662). இவர் முகம்மதியர்கள் புரியும் துன்பத்தினை அடியோடு நீக்க எண்ணமுடையவராய் தஞ்சை மன்னனது உதவியை நாட முயன்றனர். விஜயராகவ நாயக்கர், ஒரோவழி, முத்து அளகாத்திரி நாயக்கர், முகலாயர்களைத் துரத்திவிட்டு பின்னர் தம் இராஜ்ஜியத்தை கைக்கொள்ள முயலுவரோ என்று பெரிதும் பயந்து மதுரை நாயக்கருக்கு உதவி புரியாது முகம்மதியர்களோடு சேர்ந்திருப்பவர் போலும் சேராதிருப்பவர் போலும் ஓர் மனநிலைமையோடு நில்லாது தயங்கித் தத்தளித்துக் கொண்டிருந்தனர். இச்சமயத்தில் முகலாயரது சேனை இடல்கானைத் தலைவனாக நியமித்து, மதுரை நாயக்கர் போருக்கென பலப்படுத்திக்கொண்ட திருச்சிராப்பள்ளிக்கோட்டையை கொள்ளையடிக்க முயன்றது. ஆனால் அவர்களது எண்ணம் நிறைவேறவில்லை பின்னர் முகலாயரது சேனை தங்கள் நாடு சேரும் வரையில் கண்ட திசைகளிலெல்லாம் சூறையாடினர். இதுபோது தான் தஞ்சைக்கடுத்த வல்லம் கோட்டையினை முகலாயர்கள் 1660-ல் கைப்பற்றிக் கொண்டனர். இக்கோட்டையினில் தஞ்சை நாயக்க மன்னர் தனது பண்டாரத்தை சேமித்து வைத்திருந்தனர். பண்டாரம் முழுவதும் முகலாயர்களது கைவசப்படவே தஞ்சை நாயக்க மன்னனுக்கு ஆதாரமாக நின்ற அரசிறையும் பணநிர்வாக சம்பந்தமான நிலைமையும் குன்றின. அரசனது வருவாய்நிறைந்துள்ள பண்டாரம் அழிவுற்றதினால் விஜயராகவ நாயக்கரோடு தஞ்சையில் நாயக்கர் அரசியல் முடிவுற்றது.

இதன் பின்னர் மதுரையை அரசாண்ட சொக்கநாத நாயக்கர் (1662—1682) தத்தளித்துக் கொண்டிருக்கும் தஞ்சை நாயக்கரது நிலைமையைக் கண்ணுற்று, தஞ்சையை கைப்பற்ற வேண்டுவான் எண்ணி தக்க சமயம் எதிர்பார்த்திருந்தனர். சொக்கநாத நாயக்கர் தஞ்சை செழிப்புற்ற நிலைமையிலிருந்ததினால் அந்நகரை மதுரையோடு சேர்க்க எண்ணினர். மற்றும் நாயக்கர்கள் இருபகுதியாக யிருந்து ஒருவர் தஞ்சையையும் மற்றொருவர் மதுரையையும் ஆளுவது நாயக்க மன்னர்களுக்கு அழ

கல்லவென்றும் அப்படி ஆளுவது நாயக்க வம்சம் செழித்தோங் காத காரணமெனவும் எண்ணினர். மதுரை நாயக்கர் முகலாயர்களோடு எதிர்த்துப் போர் புரிய விஜயராகவ நாயக்கரை வேண்டியபொழுது அவர் அதைக் கவனியாது பராமுகமாயிருந்த நிலைமையினைக் கண்டு சொக்கநாத நாயக்கர் தஞ்சையைத் தன்னுடைய இராஜ்ஜியத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற அவா பெரிதும் உடையவராயிருந்தார். இவ்வாறிருக்கையில் சொக்கநாத நாயக்கர் விஜயராகவ நாயக்கரது புதல்வியை மணம்பெற வேண்டி, தஞ்சைக்குத் தூது அனுப்பினார். இம்மண சம்பந்தத்தினை விஜயராகவ நாயக்கர் ஏற்றாரில்லை. விஜயராகவ நாயக்கரோடு போர் புரிய இதனையே ஓர் அரிய காரணமெனக்கொண்டு சொக்கநாத நாயக்கர் தமது தளவாய் வேங்கட கிருஷ்ணப்ப நாயக்கரின் தலைமையாக ஓர் படையினை ஏவினன். இவர்கள் தஞ்சையைப் படையெடுக்கும் முன்னர், மீண்டும் சொக்கநாத நாயக்கர் தாம் தஞ்சையின்மேல் ஏவின படை போதாதென எண்ணி, அழகிரி நாயக்கர் மூலமாயும் மற்றோர் படையினையும் விடுத்தனன். தஞ்சைப் படைகளும் மதுரைப் படைகளும் தஞ்சை இராஜகோபால சுவாமி கோயிலுக் கண்மையிலுள்ள ஓர் வெளியில் கை கலந்தன. போரினில் விஜயராகவ நாயக்கரும் அவனது குமாரனும் இறந்தார்கள். விஜயராகவநாயக்கரது அரசியல் அவருடன் அழிந்ததென்றாலும் தஞ்சை நாயக்க மன்னர்களது அரசு முற்றும் ஒழியவில்லை. விஜயராகவ நாயக்கரது வம்சத்தைச் சார்ந்த செங்கமல தாஸ் என்ற ஓர் அரசிளங்குமாரர் கடந்த போரினில் மடியாதிருந்தனர். இச்செங்கமலதாஸை Tanjore District Manual விஜயராகவ நாயக்கரது குமாரர் எனக் கூறுகின்றது. ஆனால் Taylor's Oriental Manuscripts செங்கமலதாஸை விஜயராகவ நாயக்கரது குமாரனை மன்னார் நாயக்கரது குமாரன் எனக் கூறுகின்றது. எதிலராயிருக்கும் செங்கமலதாஸ் நாகையில் ஒருவர் ஆதரவின்கீழ் வளர்ந்து வந்தான். இஃது இவ்வாறாகயிருக்க சொக்கநாத நாயக்கர் தஞ்சை நாயக்க மன்னர் இறந்தவுடன் அழகிரி நாயக்கரை தஞ்சையில் ஆளவிடுத்தான். இவன் மதுரை நாயக்கருக்கு கப்பம் கட்டாது அரசரது வருவாயினை அதிகப்படுத்தி தஞ்சையையும் தன்னையும் பலப்படுத்திக்கொண்டான்.

(தொடரும்.)

# தமிழ்ச்செய்திகள்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளி விழா :— சங்கந் தொடங்கி இருபத்தைந்து ஆண்டுகள் 1936 மே 13-ஆம் நாளுடன் முடிகின்றது. அக்காலத்தே வெள்ளி விழா வெடுக்கக் கருதியும் அவ்வெண்ணம் நிறைவேறு மாறில்லை. சங்கத்தின் வருவாய் ஆகுமாறு மிக மிக இட்டிதாகவும் போகாறு மிக விரிந்தும் வருதலால் சங்கம் மேற்கொண்டிருக்கும் பணிகளைத் தடுமாற்றமின்றி நடத்துவதே கடினமாக இருக்கின்றது.

வித்துவான் தேர்விற்குப் பயிலும் மாணவர்கள் இசை முதலிய கவின் கலைகளையும் (Fine Art) மருத்துவம் ஆதிய தொழிற் கலைகளையும் பயிலுதற்கான கல்லூரி நிறுவுதல், நூல் வெளியீடு செய்தல், தமிழ் நாகரிகக் காட்சிச்சாலை நிறுவுதல், கிராமத்தொண்டு தொடங்குதல் ஆதிய நன்முயற்சிகளை மேற்கொள்ளுதலே வெள்ளி விழாவின் சிறந்த நோக்கங்களாம். இவ்வெண்ணங்கள் சிறிதளவு நிறைவேறினும் தமிழ் வளம்பெருகி தமிழரும் ஆக்கம் பெறுவர் என்பதற்கு யாதும் ஐயமில்லை.

தமிழ் நாட்டிலும், அப்பாலுமுள்ள தமிழன்பர்களும், தமிழ்ச்சங்கங்களும் தோட்கோப்புக்கொண்டு தத்தம் இயல்பிற்கேற்றவாறு முழுமனதுடன் உதவிபுரிய முன்வந்தால் இவ்வெண்ணங்கள் மிக எளிதிற் கைகூடும்.

இச்சங்கத்தின் தலைவர் ஆதிய பணியாளர்களும், சங்க உறுப்பினர்களும் சங்கத்தின் அன்பர்களும், போதிய ஊக்கமும் முயற்சியுமின்றித் தத்தமக்குள்ள அலுவல்களையும் இடர்ப்பாடுகளையும் காரணமாகக் கொண்டு சோர்வுற்றிருப்பது வருந்தத்தக்க செய்தி. இந்நிலையில் தமிழ் நாட்டின் பரந்த எல்லையில் இருக்கும் தமிழ்ப்புலவர்களிற் சிலர் 'வெள்ளிவிழா' எப்பொழுது என்று உசாவுகிற அளவில் தமது அன்பையும் ஆதரவையும் காட்டி சங்கத்தாரின் கடமைகளை நினைவூட்டி வருவதும் நலந்தரும் செயலெனமதிக்கவேண்டியிருக்கின்றது.

இனியேனும் காலத்தை அவமே கழிக்காது இக்கூறிய ஒவ்வொரு பகுதியினரும் தத்தம் கடமையை நன்குணர்ந்து பெரும்பொருள் திரட்டி வெள்ளிவிழா அண்மையில் நடக்கும் வழிகண்டு தமிழ்த் தொண்டு புரிவாராக.

---

அண்ணுமலைப் பல்கலைக்கழகம் :— இக்கழகம் தோன்றிய காலம் முதல் இதுகாறும் தமிழ்மொழியின் ஆக்கத்தையும் வளர்ச்சியையும் பேணுவது இக்கழகத்தின் சிறந்த நோக்கங் களுள் ஒன்றென்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. என்ருலும் இக்கழகத்தினர் நடத்திவரும் இசைக் கல்லூரியின் நடைமுறைகளைக் கவனிக்க இக்கொள்கை பாழ்படுதற்குரிய கருமங்கள் நிகழ்த்தப் பெறுகின்றனவென்பது தேற்றம்.

இசைக் கல்லூரி தோன்றியபோது ஏற்படுத்தப்பட்ட பாடதிட்டத்தில் தமிழ்ப் பாட்டுகள் இடம் பெறவேயில்லை. உயர்திரு. விபுலானந்த அடிகள் தமிழ்ப் பேராசிரியரான கால முதல் அவர்களின் நன்முயற்சியால் சில தமிழ்ப் பாடல்களைப் பயிற்றத் தொடங்கினதன்றி அவை பாடதிட்டத்தில் இடம் பெற்றதாகத் தெரியவில்லை.

தமிழ்மொழிக் கல்வியும், தமிழிசைப் புலமையும் தராமாட் டாத இசைக் கல்லூரி தமிழ் நாட்டின் நன்மதிப்பைப் பெற மாட்டாதெனக உணர்ந்த ஆட்சிக் கழகத்தினர் (Syndicate) இக் குறைபாட்டை நீக்க வேண்டுமென முடிவு செய்தனர். இம் முடிபை இசைக் குழுவினர். (Board of studies in Music) கருதி 1933—34ம் ஆண்டின் இசைக்கல்லூரியின் பாட திட்டத் தில் தமிழ்மொழிக் கல்வியையும், தமிழ்ப் பாடலையும் சேர்க்க வேண்டுமெனவும், அங்கிலமொழிப்பயிற்சி இசைக் கல்விக்குப் பொருத்த மற்றதெனவும் வேண்டப்படாததெனவும் முடிவு செய்தனர்.

இம்முடிபானது Faculty of Oriental Studies என்ற குழுவினரால் ஒப்புக் கொள்ளப்பெற்று இதற்கேற்றவாறு

அமைக்கப் பெற்ற பாடதிட்டம் 1936-37ம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து ஆட்சியில் கொணரத் தீர்மானித்தனர்.

21—3—36ஆம் நாள் நிகழ்ந்த கல்விக்கழகத்தில் (Acadamic council) நீண்டகாலமாய் பலகுழுவினரும் ஆராய்ந்து கண்ட இந்த முடிபைக் கருதத் தொடங்கினர்.

பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரிரியர் திருவாளர். S. சோமசுந்தர பாரதியாரவர்கள், திருவாளர். பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்கள், திரு. C. வேதாசலம் பிள்ளை அவர்கள் ஆகிய மூவரும் தமிழ்மொழிப் பயிற்சியும் தமிழிசைப் புலமையும் இன்றியமையாதவை எனவும், தமிழ் தெலுங்குமொழிகளுடன் அங்கிலமும் பயிலுவது மாணவர்க்குச் சுமையாமெனில், பாட திட்டத்தினின்றும் அதனை அகற்றி விடலாமெனவும், இசைக் குழுவினர் செய்த முடிபைப் பல எதுக்களால் வலியுறுத்தினர். தமிழ்க் கலைவளர்ப்பதும் அதன் சிறந்த நோக்கங்களுள் ஒன்றெனக்கூறி தமிழ் நாட்டில் நிறுவப் பெற்றிருக்கும் பல்கலைக் கழகத்தில் தமிழ்மொழிக்கும் தமிழிசைக்கும் இடமில்லை எனத்தகுமா? தெலுங்கர், மலையாளர், கன்னடர் ஆகியோர் தமிழ்மொழிப் பயிற்சியின்றி தமிழ்ப் பாடல்களைப் பாடுவது எவ்வாறியலும்? தெலுங்குப் பாடல்களைப் பயிலுதற்குத் தெலுங்குமொழிப் பயிற்சி இன்றியமையாதெனக்கண்டு அம்மொழிப் பயிற்சியைக் கட்டாய பாடமாக அமைத்த கழகத்தினர் தமிழ்ப் பாடலைப் பயிலத் தலைப்படும் மலையாளர், தெலுங்கர் கன்னடர்கள் தமிழ்மொழி பயிலுதல் வேண்டுமெனக் காண்பதற்குக் கண்ணும் கருத்தும் வேண்டுமா? தமிழ்மொழியறியாத மலையாளர், தெலுங்கர், கன்னடர்கட்குத் தமிழ்மொழி பயிலுதல் தாங்கவொண்ணாத பெருஞ்சுமை என்னக்கருதும் கழகத்தினர், தெலுங்கறியாத மலையாளர், கன்னடர் தமிழர்களைத் தெலுங்கு பயிலவேண்டுமென வலியுறுத்துவது ஏனோ? மொழிப் பயிற்சி சிறிதுமில்லாத பாடகர்கள் தெலுங்கு தமிழிசைகளைச் செவ்வனம்பாடுவதைக் கண்டாமன்றே! இசைப் புலமைக்கு மொழிப் பயிற்சி எற்றுக்கு? தமிழ்மொழிப் பயிற்சி

வேண்டுவதில்லை என வாதுபுரியும் கழகத்தினர் இதே ஏதுக்களைக் கூறி கல்லூரியில் பயிலப்படும் தெலுங்கு தமிழிசைகட்குச் சிறிதும் தொடர்பில்லாத அங்கில மொழிப் பயிற்சியையும் தெலுங்கு மொழிப் பயிற்சியையும் பாடதிட்டத்தினின்றும் அகற்றாதது ஏனோ? பொருளுணர்ச்சியுடன் பாடல்களைப் பாடுதல் மெய்ப்பாடு விளங்கி இசைகள் சிறக்குமென்று கண்டு தெலுங்குப் பாடல்களைப் பாடுவோர் அம்மொழி பயில வேண்டுமென விதித்த கழகத்தினர் தமிழ்ப்பாடலுக்கு இவ்விதி சாலாதெனக் கருதும் மதி என்னையோ? தமிழ் நாட்டில் நிகழும் இசையரங்குகளில் பொருட்பொலிவுள்ள தமிழ்ப்பாடல்களையே மிகமிக அதிகமாய்ப் பாடிவர இசைப் புலவர்கள் முயலவேண்டுமெனவும், இவ்வாறு இசை அரங்குகள் நடந்தால் பொருளுணர்ந்து மனங்கனிந்து மக்கள் பயன்துய்த்து செம்மைப்பெறுவர் என்றும் சிறந்த இசைப்புலவர்கள் அண்ணமலைநகரில் ஒருங்குகூடி அண்மையில் செய்த முடிபுகளின் உண்மை காணமுடியாத கழகத்தினரின் மதிதான் என்னே? இசைப்பயிற்சியை விரும்பி கல்லூரியிற் சேரும் மாணவர்களை பொருளுணரமாட்டாத இசைக்கும் இசைத்தட்டுகள் (Gramophone records) போன்ற கருவிகளாகச் செய்து "சங்கீத பூஷணம்" என்ற பெயரால் அலங்கரித்து அனுப்பப்பெறும் நன்மரங்களால் பல்கலைக் கழகத்தின் இசை விளங்குமா?

இசைக் கல்லூரியிற் பயிலும் மாணவர்களில் பெரும்பாலர் அங்கிலம் அறவே தெரியாதவர்களாய் இருக்க அவர்கள் இரண்டு ஆண்டுகள் அங்கிலம் பயில வேண்டுமெனும் பாடதிட்டத்தினால் விளையும் பயன் யாதேனும் உளதா? இரண்டெழுத்துச் சொற்களைக்கூட்டிப் படிக்கக் கற்பிக்கமுயலும் பல்கலைக்கழகத்தினரின் மதி நுட்பத்தை அறிவுடை உலகம் எங்ஙனம்பாராட்டும்? இம்மாணவர்கள் கற்கும் அங்கிலந்தான் கல்லூரியில்பயிலும் இசைக்கலைக்கு எவ்வாறு இயைபுடையது? எங்ஙனம் துணைசெய்யும்? இசைக் கலை தமிழ் மொழியில் கற்பிக்கப் பெற்றும், தேர்வுகள் நடத்தப் பெற்றும், வருகின்ற நிலையில் பாடதிட்டத்தினின்றும் தமிழ் மொழியைப் புறக்கணிப்பதும் அங்கில மொழி வேண்டு

மென வாது புரிவதும் மதியுடைமை ஆகுமா? இன்னோரன்ன காரணங்களைத் தமிழன்பர்கள் விளக்கியும், தேரமாட்டாத கழக உறுப்பினரால் விளையும் ஏதங்கட்கு அளவு தானும் உண்டோ? இக்கூறிய முடிபுகளை நிறைவேற்றுதற்கு தமிழன்பர்கள் முன்மொழிந்தும், வழி மொழிந்தும் துணைமொழிந்தும் அவற்றினை ஏற்காது அழி வழக்குப் பேசி எதிர்வாதம் புரிந்து வன்கண்மை செய்தவர்கள் திரு. V. S. கிருஷ்ணய்யர் அவர்கள், திரு. இராமாநுஜாச்சாரியார் அவர்கள், திரு. C. R. மயிலேறுஐயர் அவர்கள், திரு. G. சீனிவாசய்யர் அவர்கள், M. S. சுந்தரம் ஐயர் அவர்கள் திரு. A. நரசிங்கராயர் அவர்கள் திரு. T. R. வேங்கடராம சாஸ்திரியார் அவர்கள் முதலியோராவர். பேதையுங் கொடிறும் போலக் கொண்டது விடாது முனைத்து நின்று தமிழ் மொழியையும் தமிழிசையையும் புறக்கணித்த கொடுஞ்செயலைத் தமிழ்நாடு கருத்தில் இருத்தி ஆவனபுரிய வேண்டுவதில்லையா? இத்தகையோரது மனப்பான்மையும், கொள்கையும் எவ்வாறாக இருப்பினும் Pro-chancellor அவர்களும், Vice-chancellor அவர்களும் இவ்வாதங்களின் நலந்தீங்குகளை அறிந்து இவர்களைத் தெருட்டி தமிழ் நாட்டின் நன்மதிப்பைப்பெற முயல வேண்டுவதில்லையா?

இசைக் கல்லூரியில் பயின்றுவரும் மாணவர்கள் கற்க வேண்டுவது அங்கிலமும் தெலுங்குமாமென்றும், கல்லாது ஒழிக்க வேண்டுவது தமிழ்மொழி என்றும் கல்விக்கழகத்தினர் (Acadamic Council) செய்த முடிபை ஆட்சிக் கழகத்தின் (Syndicate) ஆராய்ச்சிக்கு விடுக்கப்பட்டிருக்கின்றது. தமிழ் நலங்களை அறிந்த ஒரு சிலரும் இல்லாது அமைக்கப் பெற்றிருக்கும் ஆட்சிகழகத்தினரால் தமிழ்க் கல்வியும் தமிழ்க் கலையும் பேணப்படுமென எண்ணுவது எங்ஙனம்?

# சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம், திருநெல்வேலி.

இச்சங்கம் கலைச்சொற்களை ஆங்கிலத்திலிருந்து தமிழில் ஆக்கும் பொறுப்பை மேற்கொண்டுள்ளது. அதன் முதற்படி இப்போது வெற்றியாக நிறைவேறியுள்ளது. சங்கத்தின் சொல் லாக்கக்கழகம் திருநெல்வேலியில் நாற்பத்தொருநாட்கள் இசைத் தமிழ்ச்செல்வர் திரு. தி. இலட்சுமணப்பிள்ளையவர்கள் பி. ஏ., தலைமையில் மாநாடு கூடி 1. பூதநூல் (Physics), 2. இயைபு நூல் (Chemistry), 3. கணக்கு (Mathematics), 4. இயற்கை நூல் (Natural Science), 5. உடலியலும் நலவழியும் (Physiology & Hygiene), 6. தரைநூல் (Geography), 7. வரலாறு முதலியன (History etc ), ஆகிய கலைகளுக்குச் சொற்களை அமைத்திருக்கிறது.

சங்கம் வரும் 1936 செப்டம்பர் திங்களில் சென்னையில் ஒரு மாநாடு கூட்ட ஏற்பாடு செய்துவருகிறது; அதில் புலவர்களையும் ஆராய்ச்சியாளரையும் கூட்டி அச்சொற்களை மறுபடி ஆராய்ந்து முடிவு செய்யப்போகிறது. மாநாட்டுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகப்பேராசிரியராகஇருந்த உயர் திரு.சாமி. விபுலானந்தர் B.Sc. அவர்கள் தலைமைதாங்க அன்புடன் இசைந்திருக்கிறார்கள்.

இப்போது அமைத்துள்ள கலைச்சொற்கள் அச்சாயிருக்கின் றன. பற்றுடையாருக்கு அவை அனுப்பப்பெறும். அவைகளை ஆராய்ந்து ஒப்புக்கொள்ளக்கூடிய திருத்தங்களை அனுப்புகிறவர் களில் முதன்மையானவர்களுக்குத் தக்கபரிசுகள் கொடுக்கப் பெறும்.

மாநாட்டின் அறிக்கைகள் தமிழ் நாட்டிலுள்ள கல்வி நிலையங்களுக்கும், அறிஞர் சங்கங்களுக்கும், புலவருக்கும் அனுப்பப்பெறும். பள்ளிக்கூட ஆசிரியரும், கல்வியாளரும் இவ்வியக்கத்திற் பற்றுடையாரும் மாநாட்டிற் கலந்துகொள்ள வேண்டுகின்றோம். பிற விவரங்கள் அமைச்சர், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

தமிழ்த்தாயின் வளர்ச்சியிலும், பள்ளிக்கூடங்களில் தாய்மொழி வழியாகக் கலைப்பயிற்சியிலும் ஈடுபட்டுள்ளவர் யாவரும் இச் சங்கத்தின் முயற்சிகளுக்கு இயன்ற துணை செய்ய முற்படவேண்டும்.

உ

# கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

## கல்லூரிக்கு அன்பர்கள் உதவிய "பங்குனி" நன்கொடை.

| திங்கள் நன்கோடை. | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| திரு. சித்த வைத்திய சரபம் Dr. ஆ. சோதிபாண்டியன் | அவர்கள் | 5 | 0 | 0 |
| ,, R. கனகசபாபதி நாயகர் (Post Master) | ,, | 1 | 0 | 0 |
| ,, நே. அ. அனந்தவிசய முதலியார் | ,, | 1 | 8 | 0 |
| ஆண்டு நன்கோடை. | | | | |
| ,, Dr. சொக்கலிங்கம் பிள்ளை L. M. P. (ரூ. 12-ல் கடைசி தவணை.) | ,, | 2 | 0 | 0 |